# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

## மஞ்சக்குடி


முனைவர். ரெ. மகாலெட்சுமி

தமிழ்த்துறை


**பாடத் தலைப்பு – வல்லினம் மிகா இடங்கள், ஒரு, ஓர் வரும் இடங்கள், அது, அ து வரும் இடங்கள், தான், தாம் வரும் இடங்கள், சங்க இலக்கியம்.**


பாடத் தயாரிப்பு

முனைவர். ரெ. மகாலெட்சுமி

# 2. வல்லினம் மிகா இடங்கள்

தமிழில் வல்லெழுத்துக்களான க, ச, ட, த, ப, ற என்ற எழுத்துக்கள் மிகாமல் வரும் இடத்தை வல்லினம் மிகா இடங்கள் என்கிறோம்.

1. அது, இது, எது, அவை, இவை, எவை என்ற சொற்களின் பின் வல்லினம் மிகாது,

   அது + பெரிது = அதுபெரிது

   இது + பெரிது = இதுபெரிது

   அவை + சென்றன = அவை சென்றன

   இவை + சென்றன = இவை சென்றன

2. அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு என்ற சொற்களின் பின் வல்லினம் மிகாது.

   அத்தனை + செடிகள் = அத்தனை செடிகள்

   எத்தனை + மனிதர்கள் = எத்தனை மனிதர்கள்

   அவ்வளவு + கடுகு = அவ்வளவு கடுகு

   இவ்வளவு + பருப்பு = இவ்வளவு பருப்பு

3. ஒரு, இரு, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது என்ற எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

   ஒன்று + கொடு = ஒன்று கொடு

   ஐந்து + பேர் = ஐந்து பேர்

   ஒன்பது + பேர் = ஒன்பது பேர்

4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர பிற எச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

   ஓடாத + குதிரை = ஓடாத குதிரை

   பாடாத + தேனி = பாடாத தேனி

5. வியங்கோள் வினை முற்றின் பின் வல்லினம் மிகாது.

   வாழ்க + வாழ்க = வாழ்க வாழ்க

   வீழ்க + கொடுமை = வீழ்க கொடுமை

6. விளிப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

   தம்பி + வா = தம்பி வா

   தம்பி + போ = தம்பி போ

7. இரண்டு வடமொழிச் சொற்கள் சேறும் போது வல்லினம் மிகாது.

ஆதி + பகவன் = ஆதி பகவன்

தேச + பக்தி = தேச பக்தி

8. வினைத்தொகையின் பின் வல்லினம் மிகாது

அலை + கடல் = அலைகடல்

சுடு + சோறு = சுடுசோறு

9. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. (பெரும்பாலான இடங்களில் மட்டும்)

யானை + குதிரை = யானை குதிரை

சேரர் + சோழர் + பாண்டியர் = சேர, சோழ, பாண்டியர்

10. நான்காம் வேற்றுமைத் தொகையில், உயர்திணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

பொன்னி + கணவன் = பொன்னி கணவன்

11. ஆறாம் வேற்றுமையில் நிலைமொழி உயர்திணையாய் இருந்தால் வல்லினம் மிகாது.

கண்ணகி + கை = கண்ணகி கை

தம்பி + துரை = தம்பிதுரை

12. அம்ம என்னும் இடைச் சொல்லின் பின் வல்லினம் மிகாது.

அம்ம + கொடியது = அம்ம கொடியது

13. எழுவாய்த் தொடர்களில் வல்லினம் மிகாது.

இராமன் + வந்தான் = இராமன் வந்தான்

14. தெரிநிலை வினையெச்சங்களில் வல்லினம் மிகாது.

என்று + பேசினாய் = என்று பேசினாய்

15. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது

கதை + சொல் = கதை சொல்

பறவை + பிடித்தான் = பறவை பிடித்தான்

16. அ, லு, யா என்னும் வினா எழுத்துக்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அவனா + சொன்னான் = அவனா சொன்னான்

தம்பியோ + அழுகிறான் = தம்பியோ அழுகிறான்

# 3. இடைநிலை மெய்ம்மயக்கம்

*தமிழ் மொழியில் மொழிக்கு முதலில் மெய்யெழுத்துக்கள் வாரா. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், உயிர்மெய் எழுத்துக்கள் பத்தும் மட்டுமே மொழிக்கு முதலில் வரும்.*

*மெய்யெழுத்துக்கள் மொழிக்கு நடுவில் சேர்ந்து வருதல் மெய்ம்மயக்கமாகும். (ஞ, ண, ந, ம, ன, ய, ற, ல, வ, ழ, ள) மொழிக்கு இறுதியில் வரும். மொழியின் இடையில் (நடுவில்) பதினெட்டு மெய்யெழுத்துக்களும் வரும். மொழியின் இடையில் வரும் இந்தப் பதினெட்டு மெய்யெழுத்துக்களும் சேர்ந்து வருவதே இடைநிலை மெய்ம்மயக்கம் ஆகும்.*

*பக்கம் - க் (க் + அ) = பக்கம்*

*சட்டம் - ட் (ட் + அ) = சட்டம்*

## மெய்ம்மயக்கம் வகை

*மெய்ம்மயக்கம் இரண்டு வகைப்படும். அவை,*

1. *வேற்றுநிலை மெய்ம்மயக்கம்*
2. *உடனிலை மெய்ம்மயக்கம்*

## 1. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

*ஒரு மெய்யுடன் வேற்று மெய் வந்து மயங்குவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். அதாவது மெய்கள் வேறு மெய்களோடு மயங்குவது வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும்.*

*க், ச், த், ப், என்ற நான்கு மெய்யெழுத்துக்களையும் தவிர, பிற பதினான்கு மெய்யெழுத்துக்களும் பிற மெய்களோடு கூடிவருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும்.*

*ங், ஞ், ட், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், என்ற பதினான்கு எழுத்துக்களும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் வரும்.*

*1. ட், ற், ல், ள் என்ற மெய்யெழுத்துக்களின் முன் க், ச், ப், மெய்கள் மயங்கிவரும்.*

| | | | |
|---|---|---|---|
| ***(எ.கா)*** *ட் க்* | *- வேட்கை* | *ற் க்* | *- கற்க* |
| *ட் ச்* | *- வெட்சி* | *ற் ச்* | *- முயற்சி* |

| | | | |
|---|---|---|---|
| ட் ப் | - நட்பு | ற் ப் | - கற்பு |
| ல் க் | - வலக்கை | ள் க் | - கொள்கை |
| ல் ச் | - வல்சி | ள் ச் | - நீள்சதுரம் |
| ல் ப் | - சால்பு | ள் ப் | - கொள்பு |

2. ல், ள் என்ற மெய்யெழுத்துக்களின் முன் ய், வ் என்ற மெய்கள் மயங்கி வரும்.

| | | | |
|---|---|---|---|
| ல் ய் | - பல்யானை | ல் வ் | - கல்வி |
| ல் ள் | - வெள்ளாறு | ள் வ் | - மீள்வாய் |

3. ங, ஞ, ண, ந, ம, ன என்ற மெய்யெழுத்துக்களின் முன்னர் அவற்றின் இனமான க, ச, ட, த, ப, ற (வல்லின மெய்) மயங்கும்.

| | | | |
|---|---|---|---|
| ங் க் | - மாங்காய் | ந் த் | - பந்து |
| ஞ் ச் | - பஞ்சு | ம் ப் | - பாம்பு |
| ண் ட் | - பண்டம் | ன் ற் | - தென்றல் |

4. ண், ன் என்ற மெய்யெழுத்துக்களின் முன்னர் க், ச், ஞ், ப், ம், ய், வ், என்ற மெய்கள் மயங்கி வரும்.

| | | | |
|---|---|---|---|
| ண் க் | - காண்க | ண் ய் | - வெண்யானை |
| ன் க் | - நான்கு | ன் ய் | - கான்யாறு |
| ண் ஞ் | - வெண்ஞாயிறு | ண் வ் | - மண்வட்டம் |
| ன் ஞ் | - பொன்ஞான் | ன் வ் | - பொன்வயல் |
| ண் ப் | - மாண்பு | ண் ச் | - வெண்சோறு |
| ன் ப் | - இன்பம் | ன் ச் | - நன்செய் |
| ண் ம் | - பெண்மை | | |
| ன் ம் | - மென்மை | | |

5. ஞ், ந், ம், வ் என்ற மெய்யெழுத்துக்களின் முன்னர் 'ய்' மயங்கிவரும்.

| | |
|---|---|
| ஞ் ய் | - உரிஞ்யாது |
| ந் ய் | - பொருந்யாது |
| ம் ய் | - உரும் யாது |
| வ் ய் | - தெவ் யாது |

6. 'ம்' என்ற மெய்யெழுத்தின் முன்னர் 'ப், ய், வ்' மயங்கி வரும், ம் வ் - கலம்யாது, கம்பன். கலம் வலிது

7. ய், ர், ழ், என்ற மெய்யெழுத்துக்களின் முன்னர் க், த், ந், ப், ம், ச், ஞ், ய், வ், ங், என்ற மெய்கள் மயங்கி வரும்.

| | | |
|---|---|---|
| ய் க் - பொய்கை | ர் க் - சேர்க | ழ் க் - வாழ்க்கை |
| ய் த் - செய்தி | ர் த் - சேர்தல் | ழ் த் - வாழ்த்து |
| ய் ந் - பாய்ந்து | ர் ந் - சேர்ந்த | ழ் ந் - வாழ்ந்தவர் |
| ய் ப் - செய்ப | ர் ப் - அமர்பு | ழ் ப் - கவிழ்ப்பு |
| ய் ம் - பொய்மை | ர் ம் - சேர்மம் | ழ் ம் - தாழம்பூ |
| ய் ச் - எய்சிலை | ர் ச் - வார்சிலை | ழ் ச் - வாழ்சேரி |
| ய் ஞ் - ஆய்ஞர் | ர் ஞ் - சேர்ஞர் | ழ் ஞ் - ஆழ்ஞர் |
| ய் ய் - மெய்யர் | ர் ய் - போர்யாது | ழ் ய் - வீழ்யானை |
| ய் வ் - மேய்வன | ர் வ் - வேர்வலது | ழ் வ் - வாழ்வு |
| ய் ங் - வேய்ங்குழல் | ர் ங் - வேர்ஙனம் | ழ் ங் - பாழ்ங்கிணறு |

## 2. உடனிலை மெய்ம்மயக்கம்

ஒரு மெய்யெழுத்துடன் அதே மெய்யெழுத்து வந்து மயங்குவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

ப் ப - கப்பல்

ள் ள - வெள்ளம்

தமிழில் உள்ள பதினெட்டு மெய்யெழுத்துக்களில் ர், ழ் என்ற இரண்டு மெய்கள் தவிர பிற க, ச, ட, த, ப, ற, ஞ, ங, ண, ந, ம, ன, ய, ல, வ, ள என்ற பதினாறு மெய்யெழுத்துக்களும் மயங்கி வரும்.

| | | | |
|---|---|---|---|
| க் க | - பக்கம் | ந் ந | - செந்நீர் |
| ச் ச | - தச்சர் | ம் ம | - செம்மை |
| ட் ட | - பட்டம் | ன் ன | - அன்னம் |
| த் த | - முத்தம் | ய் ய | - மெய்யன் |
| ப் ப | - கப்பம் | ல் ல | - வெல்லம் |
| ற் ற | - வெற்றி | வ் வ | - தெவ்வர் |
| ங் ங | - இங்ஙனம் | ள் ள | - வள்ளல் |
| ஞ் ஞ | - விஞ்ஞை | | |
| ண்ண | - கண்ணீர் | | |

# 4. ஒரு - ஓர் வரும் இடங்கள்

*தொல்காப்பியர் 'ஒரு' என்னும் சொல் வரும் இடத்தை*

**'முதல்நிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**
**ஞநமத தோன்றினும் யவவந்து இயையினும்**
**முதல்நிலை இயற்கை என்மனார் புலவர்'**

*என்கிறார். முதல்நிலை எண்ணாகிய ஒன்று (ஒரு) என்பது வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் வருமொழியோடு புணரும்போது 'ஒரு' நிலைமொழியாக வரும். மற்றவை திரிபு, இயல்பு எண்ணாக வரும்.*

*ஒரு கல்*
*ஒரு சுனை*
*ஒரு → ஒரு துடி*
*ஒரு பறை*

*ஒரு நாண்*
*ஒரு → தரு நூல்* } *ஞ, நூ, ம, த*
*ஒரு மணி*

*ஒரு → ஒரு யாழ் → ய*
*ஒரு → ஒருவட்கு → வ*

*ஒன்று என்னும் சொல் இலக்கணப் புணர்ச்சியின் காரணமாக ஒரு, ஓர் என்று விகர்ப்பித்து வரும். இந்த இரண்டு சொற்களும் தனித்து வராமல் பெயர்ச் சொற்களை வருமொழியாகக் கொண்டு அவற்றினைத் தழுவியே வரும்.*

## ஓர் வரும் இடம்

*தொல்காப்பியர் 'ஓர்' என்னும் சொல் வரும் இடத்தை*

**''அதன்நிலை உயிருக்கும் யாவரு காலை**
**முதல்நிலை ஒகரம் ஓ ஆகும்மே**
**ரகரத்து உகரம் துவரக் கெடுமே''** (தொல்.எ. 480)

*என்று கூறுகிறார். ஒன்று என்ற சொல்லின் திரிந்த வடிவமாகிய ஒரு நிலைமொழி முன் உயிர், யா முதலாக உடைய சொற்கள் வரும்போது ஒகரம் ஓகரமாகும். 'ரு' என்பதில் உள்ள உகரம் கெடும் என்கிறார்.*

ஒரு → ஓர் + அடை = ஓரடை

ஓர் + உலகம் = ஓருலகம்

ஓர் + உலை = ஓருலை

ஓர் + இனம் = ஓரினம்

ஓர் + ஓலை = ஓரோலை

ஓர் + எள்ளாம் = ஓரெள்ளாம்

பிற உயிர் எழுத்துக்கள் வரும் போதும் புணர்ச்சி நிலை இவ்வாறே அமைந்து வரும்.

ஒரு → ஓர் + யாழ் = ஓர்யாழ்

ஓர் + யானை = ஓர் யானை

'ஒரு' என்னும் சொல் உயிர்மெய் எழுத்துக்கு ஒரு என்னும் சொல் முன்னர் ஒரு என்னும் சொல் வரும்

உயிரெழுத்தில்லாத பிற மெய்யெழுத்துக்கு முன்னரும் ஒரு என்னும் சொல் வரும்

| | |
|---|---|
| ஒரு நாடு | ஒரு செடி |
| ஒரு விலங்கு | ஒரு கொடி |
| ஒரு மரம் | ஒரு பட்டம். |

'ஓர்' என்னும் சொல் உயிரெழுத்துகளில் தொடங்கும் சொற்களுக்கு முன்னர் ஓர் பயன்படுத்த வேண்டும்.

ஓர் + அணில் = ஓர்அணில்

ஓர் + ஆயிரம் = ஓராயிரம்

ஒரு, ஓர் ஆகிய இரண்டு சொற்களும் பெரும்பாலும் நிலை மொழிகளில் தான் பயன்படுத்த வேண்டும்.

ஒரு, ஓர் ஆகிய இரண்டு சொற்களுமே அஃறிணைச் சொற்களுக்கு முன்னர் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

# 5. அது அஃது வரும் இடங்கள்

'அது' என்ற சொல்லுக்கும் அஃது என்ற சொல்லுக்கும் பொருள் அளவில் பெரும் வேறுபாடு என்றும் கிடையாது.

## 'அது' - என்னும் சொல்

'அது' என்னும் சொல் உயிர்மெய்யெழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொற்களின் முன்னே வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (எ.கா) | அது கற்பாறை | அது + நிலம் | = | அதுநிலம் |
| | அது மலை | அது + புத்தகம் | = | அது புத்தகம் |
| | அது சக்கரம் | | | |
| | அது பட்டம் | | | |
| | அது புலி | | | |
| | அது வண்டி | | | |
| | அது மாட்டு வண்டி | | | |
| | அது காளை | | | |
| | அது கீரை | | | |
| | அது கீற்று வீடு | | | |
| | அது சாட்டை | | | |
| | அது தங்கம் | | | |

நிலைமொழியும் வருமொழியும் புணர்ச்சியில் இணையும் போது நிலை மொழியின் முதலெழுத்து உயிர்மெய்யெழுத்தாக இருந்தால் நிலைமொழி அது என வரும்.

## அஃது வரும் இடங்கள்

உயிரெழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொற்களின் முன்னர் அஃது வரும்.

(எ.கா) அஃது ஆமை

அஃது ஏணி

அஃது இல்லை

அஃது அழகிய மாலை

அஃது அரிது

அஃது அணில்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் குற்றியலுகரப் புணரியலில் தொல்காப்பியர்

**"முன்னுயிர் வருமிடத்து ஆய்தப்புள்ளி**
**மன்னல் வேண்டும் அவ்வழியான (தொ.எ.424)**

அல்வழிப் புணர்ச்சியில் உயிரெழுத்துகளுக்கு முன்பு அஃது என வரும்.

**"ஏனைமுன் வரினே தானிலை இன்றே" (தொல்.எ.425)**

அல்வழியில் உயிரில்லாத எழுத்து வந்தால் இயற்கையாக வரும் என்கிறார்.

அது மாடு, அது வீடு,

நிலைமொழியும் வருமொழியும் புணர்ச்சியில் இணையும் போது வரும்மொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் நிலைமொழி அஃது என வரும்.

அஃது + உயர் = அஃது உயிர்

அஃது + இறைவன் = அஃது இறைவன்

அஃது + ஆலமரம் = அஃது ஆலமரம்

# 6. தான், தாம் வரும் இடங்கள்

**தான் - தாம்**

* தான், தாம் ஆகிய இரண்டு சொற்களும் பெயர்ச்சொல்லாகவும் இடைச் சொல்லாகவும் வரும்.

* தான், தாம் ஆகிய இரண்டு சொற்களும் தனித்து வரா.

* இவ்விரண்டு சொற்களும் தனித்து நிற்கும் போது பொருளின்றி நிற்கும், பிற சொற்களோடு சேர்த்து வரும் போது தான் இந்தச் சொற்களுக்குப் பொருள் உண்டு.

* தான் வருவதைத் தமிழ்ச்செல்வன் உறுதிப்படுத்தினான் இத் தொடரில் "தான்" என்ற சொல் தமிழ் செல்வன் என்ற பெயர்ச் சொல்லுக்குப் பிரதிபெயர்ச் சொல்லாக வந்துள்ளது.

* தான் என்பது ஒருமை ஆகிய எண்ணையும், படர்க்கை இடத்தையும் குறித்து வந்துள்ளன.

* வினைமுற்றுச் சொல்லைக் கொண்டு 'தான்' என்னும் சொல் ஆண்பாலையோ, பெண்பாலையோ உறுதி செய்யலாம்.

* வினை முற்றுச் சொல்லைக் கொண்டு 'தான்' என்னும் சொல் திணையை குறிப்பதை உறுதி செய்யலாம்.

* உயர்திணை - தான் நினைத்தபடி முருகன் வாழ்ந்தான் - உயர்திணை / ஆண்பால்

  தான் நினைத்தவனை அழகி திருமணம் செய்தாள் - உயர்திணை / பெண்பால்

* அஃறிணை - தான் வெற்றி பெற்றதும் காளை வீரு நடை போட்டது = அஃறிணை

* தான் என்னும் பிரதிப் பெயர்ச்சொல் 'தன்' என குறுகி நின்று வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| இரண்டாம் வேற்றுமை | = | தன் + ஐ | = | தன்னை |
| மூன்றாம் வேற்றுமை | = | தன் + ஆல் | = | தன்னால் |
| நான்காம் வேற்றுமை | = | தன் + கு | = | தனக்கு |
| ஐந்தாம் வேற்றுமை | = | தன் + இன் | = | தன்னின் |

ஆறாம் வேற்றுமை = தன் + உடைய = தன்னுடைய

ஏழாம் வேற்றுமை = தன் +கண் = தன்கண்

* தான் என்னும் சொல் இடைச்சொல்லாக வரும் பொழுது பெயர்ச் சொல்லுக்கும், வினைச் சொல்லுக்கும் இடையில் வரும்.

* தான் என்னும் சொல் பெயர்ச்சொல்லை ஒட்டியே அவற்றின் பின்னர் வரும்.

* தான் என்னும் சொல் ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் ஆகியவற்றிற்குப் பொதுவானதாகும்.

ஆண்பால் = அழகன் தான் கூறினான் = உயர்திணை / ஆண்பால் படர்க்கைஇடம்

பெண்பால் = அழகி தான் கூறினாள் = உயர்திணை / பெண்பால் படர்க்கை இடம்

ஒன்றன் பால்= பசுதான் கத்தியது = அஃறிணை / ஒன்றன்பால் படர்க்கை இடம்

* 'தான்' என்னும் பிரதிப் பெயர்ச்சொல் இரண்டு திணைகளிலும் வரும்.

## தாம் - வரும் இடங்கள்

* 'தாம்' என்னும் சொல் பெயர்ச் சொல்லாகவும் இடைச் சொல்லாகவும் வரும்.

* 'தாம்' என்னும் சொல் இருதிணைக்கும் வரும்.

* தான் என்னும் சொல் பலர்பாலிலும், பலவின் பாலிலும் வரும்.

* வினைமுற்றுச் சொல்லைக் கொண்டு இன்னவகைபாலைக் குறித்து வருகிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

* தாம் நலமுடன் இருப்பதாக முருகன் குடும்பத்தார் கூறினார் - உயர்திணை / பலர்பால்

* தாம் பார்த்த இரைகளைக் கண்டு காகங்கள் தம் இனக் காகங்களுக்கு அளித்தன. அஃறிணை / பலவின்பால்

* 'தாம்' என்னும் பெயர்ச்சொல் தம் எனக் குறுகி வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும்.

இரண்டாம் வேற்றுமை = தன் + ஐ = தன்னை

இரண்டாம் வேற்றுமை = தம் + ஐ = தம்மை

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்றாம் வேற்றுமை | = | தம் + ஆல் | = | தம்மால் |
| நான்காம் வேற்றுமை | = | தம் + கு | = | தமக்கு |
| ஐந்தாம் வேற்றுமை | = | தம் + இன் | = | தம்மின் |
| ஆறாம் வேற்றுமை | = | தம் + உடைய | = | தம்முடைய |
| ஏழாம் வேற்றுமை | = | தம் + கண் | = | தங்கண் |

'தாம்' என்னும் சொல் பெயருக்கும், வினைக்கும் இடையிலும் வரும். தாம் என்னும் சொல் பெயருக்கு முன்னால் வந்தால் பெயர்ச்சொல்லாகவும், பின்னால் வந்தால் இடைச் சொல்லாகவும் வரும்.

| | | | |
|---|---|---|---|
| நாம்தாம் கூறினோம் | - | தன்மை | பலர்பால் |
| நீர் தாம் கூறினீர் | - | முன்னிலை | |
| அவர்தாம் கூறினார் | - | படர்க்கை | |
| அவைதாம் பறந்தான் | - | படர்க்கை = பலர்பால் | |

* பொது நிலையில் 'தான்' என்பது ஒருமைக்கும் 'தாம்' என்பது பன்மைக்கும் வருவன ஆகும்.

தொல்காப்பியர்

**"தானென் கிளவி ஒருமைக்கு உரித்தே"**
**"தாமென் கிளவி பன்மைக்கு உரித்தே"**

என்று கூறுகிறார். தான் ஒருமை உணர்த்தும் வினை முற்றுகளையும், தாம் பன்மை உணர்த்தும் வினைமுற்றுகளையும் ஏற்று வரும்.

| | | |
|---|---|---|
| தான் | வந்தான்<br>வந்தாள்<br>வந்தது | ஒருமை |
| தாம் | வந்தான்<br>வந்தான் | பன்மை |

## II) இலக்கியம்

## 1. சங்க இலக்கியம்

- சங்க இலக்கியப் பாடல்கள் அனைத்தும் அகம் / புறம் ஆகிய திணைகள் பற்றி வருவதால் இதனை 'திணை இலக்கியம்' எனலாம்.
- சங்க காலத்தை தன்னரசுகாலம் என்பர்.
- சங்க இலக்கியத்தைப் பாட்டும், தொகையும் எனப் பிரிப்பர்.
- எட்டுத்தொகை முழுவதும் உதிரிப்பாடல்களின் தொகுப்பு
- பத்துப்பாட்டு நெடும்பாடல்களின் தொகுப்பாகும்.
- சங்கப் பாடல்களைப் பாட்டு, அளவு, பொருட் சிறப்பின் அடிப்படையில் பகுத்தனர்.

## எட்டுத்தொகை நூல்கள்

- குறைந்த அடிவரையுள்ள 2,240 தனிநிலைப் பாடல்களையும் தொகுத்து எட்டுத்தொகை என்று பெயரிட்டனர்.

1. ஐங்குறுநூறு - 500 பாடல்கள்
2. நற்றிணை - 400 பாடல்கள்
3. குறுந்தொகை - 400 பாடல்கள்
4. அகநானூறு - 400 பாடல்கள்
5. கலித்தொகை - 150 பாடல்கள்
6. புறநானூறு - 400 பாடல்கள்
7. பதிற்றுப்பத்து - 100 பாடல்கள்
8. பரிபாடல் - 70 பாடல்கள்

- தொகுக்கப்பட்ட நூல் ஆதலால் இவை தொகை நூல்களாகும்.
- இந்நூல்கள் 'எண் பெருந்தொகை நூல்கள்' என்றும் அழைக்கப்படும்.
- சங்க கால மக்களின் வாழ்க்கையை ஓவியம் போல் காட்டும்
- சங்ககால மக்கள் காதல், வீரம் ஆகியவற்றை இரண்டு கண்களாகப் போற்றினர்.

- *எட்டுத்தொகை நூல்களை நினைவில் கொள்ள ஒரு பழம் வெண்பா பாடல் என்று காணப்படுகிறது.*

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல் - கற்றறிந்தோர்**
**ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை"**

- *எட்டுத்தொகையில் அகம் சார்ந்த நூல்கள் ஐந்து.*

  *1. நற்றிணை, 2. குறுந்தொகை, 3. ஐங்குறுநூறு, 4. கலித்தொகை, 5. அகநானூறு*

- *புறம் சார்ந்த நூல் - இரண்டு*

  *1. புறநானூறு, 2. பதிற்றுப்பத்து*

- *அகமும்புறமும் கலந்த நூல் - பரிபாடல்*
- *கலித்தொகை - கலிப்பாவால் பாடப்பட்ட நூல்*
- *பரிபாடல் - பரிபாடலாலும் பாடப்பட்ட நூல்*
- *பிற ஆறு நூல்களும் - ஆசிரியப்பாவால் பாடப்பட்ட நூலாகும்.*
- *எட்டுத்தொகையில் சிதைவு இல்லாமல் முழுமையாகக் கிடைக்கும் நூல்கள் நான்கு*

  1. *நற்றிணை (400 + 1)*
  2. *குறுந்தொகை (400 + 1)*
  3. *கலித்தொகை (149 + 1)*
  4. *அகநானூறு (400 + 1)*

- *எண்ணிக்கையில் குறிக்கப்படும் நூல்கள் - ஆறு*
- *நானூறு என்னும் எண்ணிக்கையில் குறிக்கப்படுவன - நான்கு*

  1. *அகநானூறு*
  2. *புறநானூறு*
  3. *நற்றிணை நானூறு*
  4. *குறுந்தொகை நானூறு*

- *'நூறு' என்னும் எண்ணிக்கையில் குறிக்கப்படுவன - இரண்டு*

  1. *ஐங்குறுநூறு (5 x 100 = 500)*
  2. *பதிற்றுப்பத்து (10 x 10 = 100)*

- எண்ணிக்கையில் பெயர் பெயராத நூல்கள் - இரண்டு

  1. கலித்தொகை 2. பரிபாடல்

- எட்டுத்தொகையில் அதிக பாடல்களைக் கொண்ட நூல் - ஐங்குறுநூறு

- குறைந்த பாடல்களைக் கொண்ட நூல் - பரிபாடல்

- எட்டுத்தொகை நூல்களுள் முதலும், முடிவும் கிடைக்காமல் இருக்கும் நூல்கள் - இரண்டு

  1. பதிற்றுப்பத்து 2. பரிபாடல்

- ஒரு சில பாடல்கள் சிதைந்த நிலையில் காணப்படும் நூல்கள் இரண்டு

  1. ஐங்குறுநூறு 2. புறநானூறு

- எட்டுத்தொகையில் ஒரு திணை அல்லது பொருள் பற்றிய வரிசை அடிப்படையில் தொகுக்கப்பட்ட நூல்கள் இரண்டு

  1. கலித்தொகை 2. பரிபாடல்

- பத்துப்பத்து பாடல்களின் வரிசை அடிப்படையில் தொகுக்கப் பட்ட நூல்கள் இரண்டு

  1. ஐங்குறுநூறு 2. பதிற்றுப்பத்து

- உதிரிப் பாடல்களின் தொகுப்புகள் போன்று காணப்படுபவை நான்கு நூல்கள் - நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு

- எட்டுத்தொகை நூலைத் தொகுப்பித்த அரசர்கள்...

  1. அகநானூறு - பாண்டியன் உக்கிரப்பெருவழுதி - பாண்டிய மன்னன்

  2. ஐங்குறுநூறு - யானைக் கட்சேய் மாந்தரஞ் - (சேரன்) சேரல் இரும்பொறை

## அகம் சார்ந்த நூல்கள்

## 1. நற்றிணை

- நற்றிணை = நல் + திணை = நற்றிணை

நல் = நல்லத்திணை = ஒழுக்கம் - நல்ல ஒழுக்கங்களை எடுத்துக் கூறும் நூல். திணை என்ற சொல்லோடு ‘நல்’ என்ற அடைமொழி.

- ‘நல்’ என்ற அடைமொழியைப் பெற்ற நூல்

- *திணை - அகத்திணை*
- *பாடல்களின் எண்ணிக்கை - 400 + 1*
- *பாடிய பா - ஆசிரியப்பா*
- *பாடிய புலவர்களின் எண்ணிக்கை - 47 பேர்*
- *புகழ்பெற்றத் தொடரால் குறிக்கப்படுவோர் - 7*
- *அதிகப் பாடல்களைப் பாடியபுலவர்*
- *அடிவரையறை - குறைந்தது 9 - அதிகம் 12*
- *குறிஞ்சித்திணைப் பாடல்கள் - 130 பாடல்கள்*
- *முல்லைத்திணைப் பாடல்கள் - 30 பாடல்கள்*
- *மருதத்திணைப் பாடல்கள்*
- *நெய்தல் திணைப் பாடல்கள்*
- *பாலைத் திணைப் பாடல்கள்*
- *தொகுத்தவர் - பெயர் தெரியவில்லை*
- *தொகுப்பித்தவர் - பன்னாடு தந்த மாறன் வழுதி*
- *நற்றிணையில் இடம்பெறும் வேந்தன் - தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன்*
- *நற்றிணையில் இடம்பெற்ற குறுநில மன்னர்கள்*

*1. அதியமான் அஞ்சி, 2. காரி, 3. அழிசி, 4. குட்டுவன், 5. சேந்தன், 6. ஆய் அண்டிரன், 7. அதியன், 8. ஓரி, 9. நன்னன். நற்றிணையில் தோழிக் கூற்றுப்பாடல்கள் அதிகம்.*

## சிறப்புக்கள்

1. *திருவள்ளுவருக்கு முன்னோடியாக நற்றிணைப் புலவர் ஒருவர் நாகரிக வாழ்வு வாழ்ந்த தமிழனின் வாழ்வை,*

**'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பினும்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'**

*என்று புகழாரம் சூட்டுகிறார்.*

2. *உலகியல் வாழ்வுக்கு நீர் எவ்வளவு இன்றியமையாததோ அதைப் போல தலைவனின் இல்லற வாழ்விற்குத் தலைவனின் அன்பு அருள் தோய்ந்த காதல் உள்ளம் இன்றியமையாதது என்பதை,*

**'நீரின்றி அமையா வுலகம்போலத்**
**தம்மின் றமையா நந்நயந் தருளி'**

*என்ற நற்றிணைப் பாடல் புலப்படுகிறது.*

3. *விருந்தோம்பலின் மகத்துவத்தையும், இரவு நேரத்திலும் விருந்து உபசரிக்கும் தமிழரின் வாழ்வின் அறத்தினை,*

**'அல்லி ராயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்லியல்'** (நற் - 142)

*என்ற பாடல் புலப்படுத்துகிறது.*

4. *உலகத்து உயிர்களையெல்லாம் உறவாகக் கொள்ளும் உயரியப் பண்பாட்டையும், வாழ்விற்கான நோக்கத்தினையும்,*

**'நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே'** (நற் - 172)

*என்ற பாடல் வெளிப்படுத்துகிறது.*

5. *கண்ணகியின் வரலாற்றையும், கதையினைக் கூறும் பாடல் நற்றிணையில் உள்ளது.*

**'ஏதிலாளன் கவலை கவற்ற ஒரு முலையறுத்த**
**திருமா யுண்ணி'**

6. *தமிழனின் பண்பட்ட வாழ்வையும், ஏழு பிறப்பிலும் தான் திருமணம் செய்து கொண்ட தலைவனோடுத் தன் நட்புறவுத் தொடர வேண்டும் என்பதை,*

**'சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில்**
**பிறப்புப் பிறிதாகுவ தாயின்**
**மறக்குவன் கொல் என் காதலன் எனவே'**

## மரபுச் செய்திகள்

1. *பிற்காலத்தில் தோன்றிய தூதுவகை இலக்கியத்திற்கு முன்னோடியாகக் கிளி, நாரை, குருகு ஆகியவற்றைத் தூதாக அனுப்பியது.*

2. *தமிழர்கள் காலால் பந்து விளையாடும் பழக்கம்*

*காதலன் வரவை பல்லி கூறுவதும், தலைவன் வரும், நாளை தலைவி 'சுவரிலே கோடிட்டு எண்ணும் பழக்கவழக்கம் வௌவால் கனவு காணும் உண்மைகளையும் எடுத்துக் கூறுகிறது.*

## 2. குறுந்தொகை

1. *'நல்ல' என்னும் உடைமொழியைக் கொண்ட நூல்*
2. *குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை என்பெயர் பெற்றது.*
3. *இறையனார் களவியல் உரை குறுந்தொகை நானூறு என்று இந்நூலைக் குறிப்பிடுகிறது.*

*திணை - அகத்திணை*

*பாடல்களின் எண்ணிக்கை - 400 + 1*

*பாடிய பா - ஆசிரியப்பா*

*புலவர்களின் எண்ணிக்கை - 203 பேர்கள்*

*புகழ்பெற்ற வரிகளால் பெயர் பெற்றவர்கள் - 18 பேர்கள்*

*பாடல்கள் பாடிய பெண்பாற் புலவர்கள் - 13 பேர்*

*அடிவரையறை - சிற்றெல்லை - 4 அடி, பேரெல்லை - 8 அடி*

*குறிஞ்சித் திணைப்பாடல்கள்*

*முல்லைத் திணைப்பாடல்கள்*

*மருதத் திணைப்பாடல்கள்*

*நெய்தல் திணைப்பாடல்கள்*

*பாலைத் திணைப்பாடல்கள்*

*கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம்பாடிய பெருந்தேவனார்*

*தொகுத்தவர் - பூரிக்கோ*

*தொகுப்பித்தவர் - பெயர் தெரியவில்லை*

### சிறப்புக்கள்

1. *தொகுக்கப்பட்ட முதல் தொகை நூல்*
2. *கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி - என்ற பாடல் திருவிளையாடற் புராணத் 'தருமி' வரலாற்றுக்கு முதன்மையாக விளங்கும்.*
3. *பரணர் பாடிய பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள் அதிகம் இடம்பெறுகின்றன.*
4. *அன்புறவால் இரண்டறக் கலக்கும் இரண்டு தூய உள்ளமும்*

**'செம்புலப்பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'**

*என்ற பாடல் உணர்த்துகிறது.*

5. *பிரிவின் துயரத்தைத் தவிர்க்கத் தோழி கூறுவதால் பாடும் பாடல் தமிழனின் வாழ்விற்கான சிறந்த முன்னுதாரணப் பாடலாகும்.*

**'வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்**
**மனையுறு மகளிர்க்கு ஆடவர் உயிர்'**

6. *தலைவி தலைவன் மேல் கொண்ட அன்பின் மகத்துவத்தைச் சொல்லும் அழகுத் தமிழ்ப் பாடல்.*

**'நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவு இன்றே - சாரல்'**

*அன்பின் அகலத்தை, ஆழத்தை, உயரத்தை உணர்த்தும் பாடலாகும்.*

7. *உள்ளார்ந்த தூய அன்பின் தொடர்ச்சியே இல்லற வாழ்வின் மகிழ்ச்சியும் வெற்றியுமாகும் என்று அதனைப் புலப்படுத்துகிறது.*

**'இம்மை மாறி மறுமையாயினும்**
**நீயாகியர் என் கணவனை**
**யானா கியர்நின் நெஞ்சுநேர் பவனே'**

*என்ற குறுந்தொகைப் பாடல்,*

8. *இசைக்கருவியால் பெயர் பெற்ற புலவர் - நெடும் பல்லியத்தார்*
9. *விவசாயக் கருவியால் பெயர் பெற்றவர் - ஓரேர் உழவனார்*
10. *காக்கையைச் சிறப்பித்துப் பாடியவர் - காக்கைப் பாடினியார்*
11. *இவர்களைப் போல, குப்பைக் கோழியார், வெள்ளி வீதியார், விட்ட குதிரையார், மீனெறி தூண்டிலார், அணிலாடு முன்றிலார், செப்புலப் பெயல் நீரார், உள்பட 18 புலவர்களின் பெயர் இடம் பெற்றுள்ளது.*

## சிறப்புச் செய்திகள்

1. *உரையாசிரியர்களால் அதிகம் மேற்கோள் காட்டப்பட்ட நூல் (236 பாடல்கள்)*
2. *இந்நூலில் பெண்பாற் புலவர்களான வெள்ளி வீதியார் - 8 பாடல்கள், நன்னாகையார், 8 பாடல்களை அதிகப்பட்சமாகப் பாடியுள்ளார்.*

## 3. ஐங்குறுநூறு

1. *குறைந்த அடிவரையறையை உடைய 500 பாடல்களின் தொகுப்பு ஆனதால் இந்நூல் ஐங்குறுநூறு என்றழைக்கப்படுகிறது.*

2. ஐந்திணைக்கும் நூறு பாடல்கள் வீதம் பாடப்பட்டுள்ளது.

திணை - அகத்திணை

பாடல்களின் எண்ணிக்கை - 500 + 1

பாடிய பா - ஆசிரியப்பா

பாடிய புலவர்களின் எண்ணிக்கை - 5 பேர்

அடிவரையறை - சிற்றெல்லை - 3, பேரெல்லை - 5

கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்

தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

தொகுப்பித்தவன் - யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

## பகுப்பாய்வு

1. ஒவ்வொரு நூறு பாடல்களைப் பத்துப்பத்துப் பாடல்களாகப் பகுத்து, ஒவ்வொரு பத்துக்கும் 'பத்து' என்றே முடியுமாறு தலைப் பிட்டுள்ளார்.

2. பத்துப் பாடல்களின் தலைப்புகள் முதல், கரு, உரிப்பொருட் களின் அடிப்படையிலே தலைப்பிட்டுள்ளனர். (எ.கா) கள்வன் பத்து, மந்தைப் பத்து, வேட்கைப் பத்து, அன்னாய்ப்பத்து, தொய்யோ பத்து, எருமைப்பத்து, குயிற்பத்து, கிள்ளைப்பத்து

3. பதிக அமைப்பு முறையின் தொடக்க நூல் இதுவாகும். நூலின் தொடக்கமே அரச வாழ்த்தாக அமைந்திருப்பது சிறப்பாகும்.

'வாழி ஆதன்; வாழி அவினி'

1. மிகக் குறைந்த அடிகளில் முதல் கரு; உரிப்பொருளை விளக்கும் நூல்.

2. மருதத்திணையை முதலில் வைத்துப் பாடிய நூல்

3. அம்மூவனார் பாடிய தொண்டிப்பத்து அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

4. கபிலர் பாடிய அன்னாய் வாழிப்பத்தின் பத்துப் பாடல்களும் அன்னாய் வாழி வேண்டன்னை என்றே தொடர்கிறது.

அரசர்கள் பெயர்கள் - இந்நூலில் கடுமான், குட்டுவன், ஆதன், அவினி, மத்தி கொற்கைமான் போன்ற குறுநில மன்னர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளது.

ஊர்ப்பெயர் - அழுர், தேனூர், கிழார் (காவிரி) கொற்கை, தொண்டி போன்ற ஊர்பெயர்கள் இடம்பெறுகிறது.

*பாடல் சிறப்பு - ஓரம்போகியார் பாடிய வேட்கைப்பத்துவின் முதல் வரியும், மூன்றாம் வரியும் பத்துப்பாடல்களிலும் ஒரே மாதிரி வரும்.*

**'வாழி ஆதன் வாழி அவினி**
**பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக**
**என வேட்டோளே, யாயே யாமே'**

## நூற்சிறப்பு

*இந்நூலைத் தொகுத்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை அதனால் இந்நூல் சேர நாட்டில் தொகுக்கப்பட்டிருக்கலாம். பதிற்றுப்பத்தும், ஐங்குறுநூறும் பத்துப்பத்துப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருப்பதால் தொகை நூல்களில் சேரமன்னர்கள் புதுமையைப் புகுத்த முயன்றிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.*

2. *ஐந்து திணைகளையும் பாடிய ஐந்து புலவர்களை நினைவில் கொள்ள ஒரு பழம் பாடல் ஒன்று உள்ளது.*

**"மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்**
**கருதும் குறிஞ்சி கபிலன்; - கருதிய**
**பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே**
**நூலை ஓது ஐங்குறுநூறு"**

| | | |
|---|---|---|
| *மருதத்திணை* | - | *ஓரம்போகியார்* |
| *நெய்தல் திணை* | - | *அம்மூவனார்* |
| *குறிஞ்சித்திணை* | - | *கபிலர்* |
| *முல்லைத்திணை* | - | *பேயனார்* |
| *பாலைத்திணை* | - | *ஓதலாந்தையர்* |

## நூல் கருத்துக்கள்

1. *மக்கள் வாழ்வியலுக்கும், உலக மானிட சமுதாயத்திற்கும் அரிய பாடல் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் அழகிய நூல்*

**"நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க**
**விளைக வயலே வருக இரவலர்"**
**பால்பல ஊறுக பகடு பல சிறக்க**
**பசியில்லாகுக பிணிகேன் நீங்குக**
**வேந்து பகை தணிக யாண்டு பல் நந்துக**
**மாரி வாய்க்க வளன்நானி சிறக்க**

*போன்ற பாடல் வரிகளில் சமூக முன்னேற்றத்திற்கான சமூக வாஞ்சை வெளிப்படுகிறது.*

2. *மிகக் குறைந்த அடிகளில் முதல், கரு, உரிப்பொருளைப் பாடிய இந்நூல் உள்ளுறை, இறைச்சி உவமங்களையும் அழகுறக் கூறுகிறது.*

**"பூத்த கரும்பிற் காய்ந்த நெல்லின்**
**கழனியூரன் மார்பு**
**பழனம் ஆகற்க என வேட்டோமே"**

*காய்ந்த நெல் - சரிந்துபோய் காணப்படும். ஆனால் வாழ்நாளுக்குப் பயன்படும்.*

*பூத்த கரும்பு - பூத்த கரும்பு பார்வைக்கு அழகாக இருக்கும். ஆனால் பயன்படாது.*

3. *பரத்தையிடம் சென்றுவிட்டு, மீண்டும் தலைவியைத் தேடி வீடு வருகின்ற தலைவனை நோக்கி, தோழி*

**"நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்**
**யாணர் ஊரன்"**

*என்ற பாடல்வரிகளில் பரத்தையிடம் சென்ற தலைவன் மீண்டும் கற்பு மணம் கமழும் தலைவியைத் தீண்ட வருகிறானே! என்று உள்ளுறைக் கருத்தை இலைமறையாக எடுத்துரைக்கிறாள்.*

## 4. அகநானூறு

*'அகம்' என்ற பெயரில் அமைந்த ஒரே நூல் இதுவாகும். அகத்திணைப் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதால் அகநானூறு என்று பெயர் பெற்றது.*

*திணை - அகத்திணை (அன்பின் ஐந்திணை)*

*பாடல்களின் எண்ணிக்கை - 400 + 1*

*பாடிய பா - ஆசிரியப்பா*

### பாடிய புலவர்களின் எண்ணிக்கை

*கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்*

*தொகுத்தவர் - உப்பூரிகுடிக்கிழார் மகன் உருத்திரசன்மனார்*

*தொகுப்பித்தவர் - பாண்டியன் உக்கிரப் பெருவழுதி*

*சிறப்புப் பெயர்கள் - அகப்பாட்டு, நெடுந்தொகை நானூறு, பெருந்தொகை*

### நானூறு

*அடிவரையறை - சிற்றெல்லை 13, பேரெல்லை 31 அடிகள்*

## பாடல் பகுப்பு முறை

*அகநானூறு மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

*1-120 பாடல்கள் வரை - களிற்றியானை நிரை*

*121-300 பாடல்கள் வரை - மணிமிடை பவளம்*

*301-400 பாடல்கள் வரை - நித்திலக்கோவை*

## பாட்டு வைப்பு முறையும் திணையும்

*எண் கணித முறையைப் பயன்படுத்தி ஐந்திணைகளையும் கண்டுபிடிக்கலாம்.*

**"ஒன்று மூன்று ஐந்து ஏழ் என்பான்பாலை; ஓதாது**
**நின்றவற்றில் நான்கு நெறிமுல்லை; அன்றியே**
**ஆறாம் மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு**
**கூறாதவை குறிஞ்சிக் கூற்று"**

*1, 3, 5, 7, 9 - ஒற்றைப்படை எண்கள் - பாலைத்திணை*

*2, 8, 12, - குறிஞ்சித்திணை*

*4, 14, 24, 34 - முல்லைத்திணை*

*6, 16, 26, 36 - மருதத்திணை*

*10, 20, 30, 40 - நெய்தல் திணை*

## பாடல்கள்

*பாலைத்திணை - 200 பாடல்கள்*

*குறிஞ்சித்திணை - 80 பாடல்கள்*

*முல்லைத்திணை - 40 பாடல்கள்*

*நெய்தல் திணை - 40 பாடல்கள்*

*மருதத்திணை - 40 பாடல்கள்*

## குறுநில மன்னர்கள்

*அத்தி (44) ஆதிமந்தி (45) கொடித்தேர் செழியன் அஃதை (90) அகுதை (76, 113) அவ்வி (115) அதியமான் (115) உதியஞ்சேரலாதன் (65) பழையன் கோசர், மோரியர், பாரி, காரி, கரிகால் பெருவளத்தான் (55).*

## வேந்தர்கள்

*தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.*

## சிறப்புகள்

1. *ஊட்டியன்ன சொல்லைப் பயன்படுத்திய புலவரை ஊட்டியார் (அகம்- 388)*

2. பிரிவை நோயோடு ஒப்பிட்டுப் பாடியவரை நோய்பிடியார் (அகம்- 67)

3. குடவோலைத் தேர்தல் முறையினை (அகம்- 77) விளக்குகிறது.

4. பழந்தமிழகத்துடன் யவனர்கள் வணிகத் தொடர்பு வைத்திருந்ததை,

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்"

என்ற பாடல்வரிகள் புலப்படுத்தும்

5. குழந்தைச் செல்வத்தின் அழகுச் சிறப்பை சங்க காலப்புலவர் கவினுற வருணிக்கிறார்.

"மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன்" (அகம்- 9)

6. பண்டைத் தமிழர்களின் திருமண முறையில் முரசு அறிவித்தல் - மாமிச உணவு - வெண்மணல் பரப்புதல் - வாழ்வரசிகள் நீராட்டுதல் - திங்கள் உரோகிணியுடன் கூடிய நன்னாளில் திருமணம் நடத்தினர். தாலிகட்டுதல், மந்திரம் ஓதுதல், தீவளர்த்தல், தீ வலம்வருதல் போன்றவை - தமிழர் மரபில் இல்லை என்பதை History of Tamils என்ற நூலில் ஏ.கூ. சீனிவாச ஐயங்கார் கூறுகிறார்.

## 5. கலித்தொகை

1. அகப்பொருள் பாடுவதற்குச் சிறந்த யாப்பு வடிவங்கள் இரண்டு என்றார் தொல்காப்பியர், கலித்தொகை, பரிபாடல்,

2. பாவகையால் பெயர் பெற்ற நூல்

3. கலிப்பாவால் அகத்திணையைப் பாடும் ஒரே எட்டுத்தொகை நூல் கலிப்பாவாகும்.

4. இசைத் தன்மையுடையது; உரையாடல் வடிவம் கொண்டனவாகும்.

திணை - அகத்திணை

பாடல்களின் எண்ணிக்கை - 149 + 1 = 150

பாடிய புலவர்கள் - 5 பேர்

பாவகை - கலிப்பா

அடிவரையறை - சிற்றெல்லை 11, பேரெல்லை - 80

*கடவுள் வாழ்த்தைப் பாடியவர் - நல்லந்துவனார்*

*தொகுத்தவர் - நல்லந்துவனார்*

*தொகுப்பித்தவர் - தெரியவில்லை*

*நூல் சிறப்புப்பெயர் - கற்றறிந்தார் ஏத்தும் கலி / கல்விவலார் கண்ட கலி நூல் சிறப்புக்கள்*

1. *பாலைத் திணையை முதலில் வைத்துப் பாடிய நூல்.*
2. *சங்கம் இருந்தது என்பதற்கான சான்றாதாரம் இந்நூலில் காணப்படுகிறது.*

**"நிலனாவிற் றிருதரூஉம் நீண்மாடக் கூடலார்**
**புலனாவிற் பிறந்தகொற் புதிதுண்ணும் பொழுதன்றோ"**

*என்ற வரிகளில் வரும் 'கூடல்' என்ற சொல்லாட்சிச் சங்கம் இருந்ததை மெய்ப்பிக்கிறது.*

3. *ஐந்து திணைகளையும் ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர்.*

**"பெருங்கடுங்கோன் பாலை, கபிலன்குறிஞ்சி**
**மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்**
**நல்லுருத்திரன் முல்லை நல்லந்துவன் நெய்தல்**
**கல்விவலார் கண்ட கலி"**

*என்று பழம்பாடல் கூறுகிறது.*

| | | |
|---|---|---|
| *பாலை* | - | *பாலைபாடிய பெருங்கடுங்கோ* |
| *குறிஞ்சி* | - | *கபிலர்* |
| *மருதம்* | - | *மருதனிள நாகனார்* |
| *முல்லை* | - | *சோழன் நல்லுருத்திரன்* |
| *நெய்தல்* | - | *நல்லந்துவனார்* |
| *பாலைத்திணை* | - | *35 பாடல்கள்* |
| *குறிஞ்சித்திணை* | - | *29 பாடல்கள்* |
| *முல்லைத்திணை* | - | *35 பாடல்கள்* |
| *நெய்தல் திணை* | - | *17 பாடல்கள்* |
| *கடவுள் வாழ்த்து* | - | *1 பாடல்* |
| | | *150 பாடல்கள்* |

4. *ஐந்திணைகளுக்கும் உரிய உரிப்பொருளை அழகுற எடுத்துச் சொல்கிறது ஒரு பாடல்,*

"போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கமளி ஊடல் அணிமருதம் - நோக்கொன்றி
இல்லிருத்தல் முல்லை இறங்கிய போக்கோ நெய்தல்
புல்லுங் கலிமுறை கோப்பு"

5. *சி.வை. தாமோதரன் பிள்ளை இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.*

6. *இந்நூல் முழுமையும் நல்லந்துவனாரே பாடியிருக்க வேண்டும் என்கிறார் சி.வை. தாமோதரன் பிள்ளை.*

7. *கே.என். சிவராசப் பிள்ளையும், எஸ் வையாபுரிப் பிள்ளையும் கலித்தொகை ஒரே புலவரால் பாடப்பட்டது என்கின்றனர்.*

8. *சேர, சோழ நாடுகள் பற்றியக் குறிப்புகள் ஏதும் இல்லை. அதனால் இந்நூல் மதுரையில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

9. *பாலைக்கலி - பிரிவின் துயரையும், தலைவனின் வருகையையும் அறிவித்தல்*

*குறிஞ்சிக்கலி - வரைவை வற்புறுத்துவது*

*மருதக்கலி - ஊடல் நீக்குதல் பற்றிக் கூறுதல்*

*முல்லைக்கலி - ஏறுதழுவுதல் பற்றிக் கூறுதல்*

*நெய்தல்கலி - தலைவியைத் தேற்றுதல் மற்றும் மடலேறுதல் துரை பற்றிக் கூறுவது*

## சிறப்பியல்புகள்

1. *மக்கள் நல்வாழ்க்கைக்கான வாழ்வியல் நெறிகள் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.*

"ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவெனப்படுவது மறைபிறர் அறியாமை

2. *கடன் வாங்கும் போது இருக்கும் முகமலர்ச்சி பணிவு போன்றவை திருப்பிக் கொடுக்கும்போது இருப்பதில்லை என்பதை விளக்கும் அழகிய பாடல்.*

"உன்கடன் வழிமொழிந் திரங்குங் கால் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத்து இயற்கை"

*என்கிறது.*

3. பெண்கள் புகுந்த வீட்டிற்குரியவர் என்பதை,

**"பலவுறு நறுசாந்தம் அணிபவர்கள் கல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்"**

என்ற பாடல் வரிகளும், முத்து, இசை மூலம் விளக்கும் பாங்கு கலித்துவமானதாகும்.

## புறத்திணை நூல்

## 6. புறநானூறு

புறத்திணை பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பே புறநானூறாகும்.

| | |
|---|---|
| திணை | - புறத்திணை |
| பாடல்கள் எண்ணிக்கை | - 400 (399 + 1) |
| பாவகை | - ஆசிரியப்பா |
| பாடிய புலவர்கள் | - 157 பேர் |
| அடிவரையறை | - சிற்றெல்லை 4 அடி; பேரெல்லை - 40 அடி |
| தொகுத்தவர் | - பெயர் தெரியவில்லை |
| தொகுப்பித்தவர் | - பெயர் தெரியவில்லை |
| சிறப்புப்பெயர் | - புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு |
| கடவுள் வாழ்த்துப் பாடியவர் | - பாரதம் பாடிய பெருந்தேவனார் |
| அதிகப் பாடல்களைப் பாடியவர் | - ஔவையார் (33 பாடல்கள்) |
| புறநானூறு பாடிய பெண்பால் புலவர்கள் | - 15 பேர் |

### சிறப்புகள்

1. பழந்தமிழர்களின் வாழ்வியல் களஞ்சியம்
2. பாரி - கபிலர் நட்பு, அதியன் - ஔவையார் நட்பு, கோப் பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பை நயம்பட விளக்கும் நூல்.
3. 18 சேர மன்னர்கள், 20 சோழ மன்னர்கள், 13 பாண்டிய மன்னர்கள், குறுநில மன்னர்கள் 52 பேர், கடையெழு வள்ளல்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் இந்நூல் தமிழர்களின் வரலாற்றுக் களஞ்சியம் என்றழைக்கப்படுகிறது.

4. பாடல் எண் 267, 268 - முழுமையாகக் கிடைக்கவில்லை.

5. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் திணை, துறை, பாடினோர், பாடப்பட்டோர், சூழல் பற்றிய குறிப்புகள் காணப்படும்.

6. அதியமான் நெடுமான் அஞ்சி - மழவர் கோமான் கரும்பைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தவரின் விழித் தோன்றல் கருநெல்லிக் கனியை தமிழ்மூதாட்டிக்குக் கொடுத்தவன், முதிரை மலைத்தலைவன்

**“நீலமணி மிடற்று ஒருவன்போல்**
**மன்னுக பெருக நீயே”**

7. ஆய் அண்டிரன் - பொதியமலையில் பிறந்தவன் / வேளிர் குலத்தலைவன்

**“நீலநாகம் நல்கிய கலிங்கம்**
**ஆலமர் செல்வதற்கு அமர்ந்தனன் கொடுத்த”**

சிறப்பிற்குரியவன்

8. குமணன் - முதிர மலைக்குத் தலைவன் - குமணனுக்கு நாட்டைக் கொடுத்தவன்

9. சேரமன்னனை - கடல்பிறக்கோட்டிய செல்கெழு குட்டுவன் என்றும் கரிகால் வளவனை - நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டியவன் என்று புகழ்கிறது.

## சிறப்பியல்புகள்

1. மக்கள் அறவாழ்வு வாழ்க்கை வாழ்ந்ததையும், இந்த உலகிற்கு அரசன் எவ்வளவு இன்றியமையாதவன் என்பதைக்கூறும் பொழுது,

**“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்”**

என்கிறார் ஔவையார்.

2. சேர அரசனைப் புகழ்கின்ற பொழுது, “கடல்பிறக்கோட்டிய செல்கெழு குட்டுவன்” என்றும், சோழன் கரிகால் பெருவளத்தானை “நளியிருமுந்நீர் நாவாய் ஓட்டியவன்” என்றும் புறநானூற்றுப் பாடல்கள் புகழ்ந்துரைக்கின்றன.

3. மனித சமூகத்தின் கடமைகளைப் பட்டியலிடும் போது,

**“ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே”**

என்று ஒவ்வொரு மனிதர்களுடைய கடமைகளையும் பட்டியலிடுகிறது.

4. *கபிலர் பாரியிடம் கொண்ட உள்ளார்ந்த அன்பினையும், கோப்பெருஞ்சோழனுக்கும், பிசிராந்தை யாருக்கும் இருந்த உண்மையான அன்பினையும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது.*

5. *அரசர்கள் தவறுகள் செய்யும் பொழுது புலவர்கள் அஞ்சாது இடித்துரைத்து அவர்களைத் திருத்திய செய்திகளும், அரசர்கள் சிலர் பாடிய பாடல்களும், அப்பாடல்களில் அவர்களின் வீரத்தையும், ஒழுக்கத்தினையும், புலவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த நன்மதிப்பினையும் அறிந்து கொள்ளலாம்.*

6. *மனித சமூகத்திற்கு வேண்டிய அறக்கருத்தினையும், வாழ்வியல் உண்மைகளையும் இந்நூல்,*

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமீன்" (புறநானூறு)

"வாழ்தல் வேண்டிப்பொய் கூறேன்; மெய் கூறுவேல்" (புறநானூறு)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறநானூறு)

"பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே" (புறநானூறு)

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நறீஇத் தாமாய்ந் தனரே" (புறநானூறு)

"ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதெனதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

*என்று எடுத்துக் கூறுகிறது.*

### 7. பதிற்றுப்பத்து

*சேர மன்னர்களைப் பற்றி மட்டுமே பாடும் இலக்கியம் பத்துச் சேர மன்னர்களுக்கும் பத்து பாடல்கள் வீதம் நூறு பாடல்களைக் கொண்ட நூல் பதிற்றுப்பத்து. கரையான்களால் செல்லரிக்கப்பட்டதால் முதல்பத்தும், இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை.*

*திணை - புறத்திணை*

*துறை - பாடாண்திணை*

*பாடல்களின் எண்ணிக்கை - 100*

*தற்போது கிடைக்கும் பாடல்கள் - 80*

*பாடிய புலவர்கள் - 10 பேர் (10-2=8)*

*பாவகை - ஆசிரியப்பா*

*அடிவரையறை - சிற்றெல்லை 8 அடி, பேரெல்லை - 57 அடி*

*தொகுத்தவர் - பெயர் தெரியவில்லை*

*தொகுப்பித்தவர் - பெயர் தெரியவில்லை*

*சிறப்புப்பெயர் - வழக்கில் இல்லாத ஏராளமான சொற்கள் காணப்படுவதால் 'இரும்புக்கடலை' என்பர்.*

## சிறப்புகள்

1. *ஒவ்வொரு பத்துப்பாடலின் இறுதியில் 'பதிகம்' ஒன்று காணப்படும். அதில் பாடல் பற்றிய முழு விபரமும் குறிக்கப் பட்டுள்ளது.*

   *(1) பாடியவரின் பெயர், (2) பாடல் தலைப்பு, (3) புலவர் பற்றிய பரிசில், (4) அரசன் ஆண்ட கால அளவு, (5) மன்னர்களின் பெற்றோர், (6) மன்னனின் சிறப்புகள் இடம்பெற்றிருக்கும்.*

2. *ஒவ்வொரு பத்துப் பாடலிலும் (1) துறை, (2) வண்ணம், (3) தூக்கு (இசை), (4) பாடலின் பெயர் குறிப்பிட்டுள்ளன.*

3. *பாடலின் பொருள் பொதிந்த சிறப்பான தொடர்களே பாடல் தலைப்பாகச் சூட்டப்பட்டுள்ளன.*

4. *நான்காம் பத்து அந்தாதித் தொடையால் பாடப்பட்டுள்ளது.*

5. *பாடாண்திணை என்னும் ஒரே திணை கொண்டு பாடப்பட்ட நூலாகும்.*

## பாடலைப் பாடிய புலவரும் மன்னர்களும் புலவர்களும் பெற்ற பரிசிலும் சிறப்பியல்புகள்:

1. *இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் வாழ்த்தும் பொழுது,*

   **"நின்நாள் திங்கள் அனைய ஆக! திங்கள்**
   **யாண்டோர் அனைய ஆக! அயாண்டே**
   **ஊழி அனைய ஆக! ஊழி**
   **வெள்ளை வரம்பின் ஆக!"**

*எனக் கற்பனை நயத்துடன் பாடுவது புதுமையாகவுள்ளது.*

2. *புலவர் ஒருவர் அரசனை வாழ்த்தும் பொழுது பலருக்கும் பகுத்தளிப்பதற்காகவே செல்வத்தைத் தொகுத்து வைக்கவும்,*

*பிறரின் நலத்தினைப் பேணுவதற்காகவே வாழ் என்ற பாடல் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பாடல்,*

**“பகுத்தூண் தொகுத்த ஆண்மை**
**பிறர்க்கென வாழ்திநீ ஆகல் மாறே”** **(பா.எண் 38)**

3. *ஆடு கோட்பாட்டு சேரலாதனின் வள்ளல் தன்மையைப் பாடும் நச்செள்ளையார்,*

**“வாரா ராயினும் இரவலர் வேண்டித்**
**தேரின் தந்தவர்கட்கு ஆர்பதன் நல்கும்**
**நகைகால் வாய்மொழி இசைசால் தோன்றல்”**

*எனப் புகழ்கிறார். இரவலர்கள் தாமாகவே தன்னை நாடி வராவிட்டாலும் அவர்களைத் தேரில் ஏறித்தேடிச் சென்று பரிசில் வழங்குவான் என்கிறார்.*

4. *சேர நாட்டின் வளத்தினை அழகுறப் பாடுகிறார் மற்றொரு புலவர்*

**“கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்**
**வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு**
**விழவறு பறியா முழவு இதழ் மூதூர்”**

5. *அரசர்களின் அரசியல் வாழ்வு எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதை,*

**“சின்னே காமம் கழிகண் ணோட்டம்**
**அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை**
**தெறல்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்து**
**அறந்தெரி திகிரிக்கு வழிநடை யாரும்”**

*என்பதை அழகுறக் கூறுகிறது.*

6. *ஆரியரை வென்ற இமயத்தில் வில்கொடி பொறித்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், அதியமான் இருபெரு வேளிரையும் ஒரே இடத்தில் வென்ற பெருஞ்சேரல் இரும்பொறையின் வெற்றிச் செய்தி கூறப்படுகிறது.*

## பதிற்றுப்பத்து – பாடிய புலவர்களும் பெற்ற பரிசில்களும்

| பத்துக்கள் | பாடிய புலவர்கள் | பாடப்பட்ட அரசன் ஆண்டகாலம் | பெற்ற பரிசில் |
|---|---|---|---|
| இரண்டாம் பத்து | குமட்டூர் கண்ணனார் | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 58 ஆண்டுகள் | இறையிலி நிலமாக உம்பற்பாடு, ஐந்நூறு ஊர்கள் |
| மூன்றாம் பத்து | பாலைக்கௌதமனார் | பல்யானைச்செல்கெழு குட்டுவன் 25 ஆண்டுகள் | பத்து வேள்விகள் செய்ய உதவி, மனைவியுடன் விண்ணுலகம் புகச் செய்தான் |
| நான்காம் பத்து | காப்பியாற்றுக் காப்பியனார் | களங்காய்ச்சென்னி நார்முடிச் சேரல் 25 ஆண்டுகள் | நாற்பது நூறாயிரம் பொன் மற்றும் சேர நாட்டின் ஒரு பகுதி |
| ஐந்தாம் பத்து | பரணர் | கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் 55 ஆண்டுகள் | உம்பற்காட்டு வருவாய் அரசன் மகள் குட்டுவன் சேரல் |
| ஆறாம் பத்து | காக்கைப் பாடினியார் | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் - 88 ஆண்டுகள் | ஒன்பது துலாம் பொன், நூறாயிரம் பொற்காசுகள் |
| ஏழாம் பத்து | கபிலர் | செல்வக்கடுங்கோ வாழியாதன் 22 ஆண்டுகள் | நூறாயிரம் பொற்காசுகள் நான்றா என்ற குன்றிலிருந்து கண்ணுக் கெட்டிய தொலைவுப்பகுதி |

| | | | |
|---|---|---|---|
| எட்டாம் பத்து | அரசில்கிழார் | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை - 27 ஆண்டுகள் | ஒன்பது நூறாயிரம் பொன், அரசுக் கட்டில் |
| ஒன்பதாம் பத்து | பெருங்குன்றூர் கிழார் | இளஞ்சேரல் இரும்பொறை | 32000 பொற்காசுகள், ஊர், மனை, ஏர், பிற அருங்கலன்கள் பன்னூறாயிரம் |

## 8. பரிபாடல்

*பரிபாடல் என்பது பாட்டு வகைகளுள் ஒன்று. இதன் இயல்பைத் தொல்காப்பியம் நன்கு விவரித்துள்ளது. உறுதிப் பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு, மலைவிளையாட்டு, புனல் விளையாட்டு முதலியன பற்றி இப்பாடல் வரும் என்பர் பேராசிரியர். இது இசைப்பாவாகும். இவ் வகைப் பாடல்களால் அமைந்ததொகை நூலும் 'பரிபாடல்' என்றே வழங்கி வந்துள்ளது. 'இன் இயல் மாண் தேர்ச்சி இசை பரிபாடல்' என்று இத் தொகையில் அமைந்த பாடல் ஒன்றில் வரும் வரியும் (11:137) இதன் அமைதியைப் புலப்படுத்துகின்றது. 'பரிபாட்டு' எனவும் இது வழங்கும்.*

*சங்கத்தார் தொகுத்த பரிபாடல்கள் 70 என்பது இறையனாரகப் பொருள் உரையாலும் (சூ.1), தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பேராசிரியர் உரையாலும் (செய்யு. சூ. 149) தெரிய வருகிறது. இப் பாடல்களில் யார் யாரைக் குறித்து எத்தனை பாடல்கள் இருந்தன என்பதைப் பின்வரும் செய்யுள் வெளியிட்டுள்ளது.*

"திருமாற்கு இரு-நான்கு; செவ்வேட்கு முப்பத்
தொரு பாட்டு; காடுகாட்கு ஒன்று; - மருவினிய
வையை இருபத்தாறு; மா மதுரை நான்கு என்ப-
செய்ய பரிபாடல் திறம்."

*காடுகாள் என்றது காளியை. 'காடுகாட்கு' என்பதற்குப் பதில் 'கார்கோளுக்கு' என்றும் பாடபேதம் உண்டு. கார்கோள் என்பது கடல். அந்த ஒரு பாடல் காளியைப் பற்றியதா? கடலைப் பற்றியதா? என்று இப்பொழுது அறிய வழியில்லை.*

*இவற்றுள் இப்பொழுது நமக்குப் பிரதிகளில் கிடைப்பன முதலிலிருந்து 22 பாடல்களே. எஞ்சியவை இறந்துபட்டன. எனினும், பழைய உரை களிலிருந்தும், புறத்திரட்டுத் தொகை நூலிலிருந்தும் 2 முழுப் பாடல்களும், சில பாடல்களின் உறுப்புகளும் தெரியவருகின்றன. இவை 'பரிபாடல்-திரட்டு' என்னும் தலைப்பில் நூலிறுதியில் சேர்க்கப் பெற்றுள்ளன.*

*22 பாடல்களில் 6 திருமாலுக்கும், 8 முருகனுக்கும், 8 வையைக்கும் உரியன வாயுள்ளன. பரிபாடல் திரட்டில் உள்ள 2 முழுப்பாடல்களுள் ஒன்று திருமாலைப் பற்றியும், மற்றொன்று வையையைப் பற்றியும் அமைந்தவை. பாடற் பகுதிகளுள் சில மதுரையையும் வையையையும் குறித்தன. ஒரு சில உறுப்புகள் இன்னவற்றைச் சார்ந்தவை என்று தெரியக் கூடவில்லை.*

*இந் நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார், பெயர் ஒன்றும் அறியக் கூடவில்லை. தொகுத்த பாடல்களின் அடிவரையறை பற்றிய குறிப்பும் கிடைக்கவில்லை. பரிபாடலின் சிற்றெல்லை 25 அடி என்றும், பேரெல்லை 400 அடி என்றும், தொல்காப்பியர் வரையறுத்துள்ளனர். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை, இயற்றிய ஆசிரியர் பெயர், இசை வகுத்தோர் பெயர், பண்ணின் பெயர், பற்றிய பழங் குறிப்புகள் உள்ளன. ஆயினும், பிரதிகளின் சிதைவினால் முதற் பாடலுக்கும் 22ஆம் பாடலுக்கும் இக் குறிப்புகள் கிடைக்கவில்லை. 13ஆம் பாடலுக்கு இசை வகுத்தோர் பெயர் காணப்படவில்லை. முதற் பாடலில் அராகமாக வருகின்ற 14 ஆம் வரி முதல் 28 ஆம் வரி வரையிலுள்ள பகுதி தெளிவின்றி உள்ளது. இப் பகுதியில் பொருள் வரையறை செய்வதற்குப் பிரதிகளின் உதவியும் பழைய உரையின் உதவியும் கிடைக்கவில்லை. இவ்வாறே ஏனைய பாடல்கள் சிலவற்றிலும் ஒருசில இடங்கள் உள்ளன.*

*22 பாடல்களில் 'கடவுள் வாழ்த்து'ப் பொருளில் வந்தவை 14. ஏனைய எட்டுப் பாடல்களும் வையையைப் பற்றியன. இந்த எட்டிலும் அகப்பொருள் பற்றி எழுதப் பெற்ற பழைய கருத்துகளும் உள்ளன. இந் நூற் செய்யுட்கள் மிக நீண்டனவாய் இருப்பதால், பாடல்களின் இடையிடையே, கருத்து விளங்கும் வகையில் தலைப்புகள் புதுவதாக இப்பதிப்பில் அமைக்கப் பெற்றுள்ளன.*

*முதலில் அமைந்த 11 பாடல்களின் (2-12) பண் பாலை யாழ்;அடுத்து வரும் ஐந்து பாடல்களின் (13-17) பண் நோதிறம். அதன் பின்னருள்ள நான்கு பாடல்களின் (18-21) பண் காந்தாரம். இவ் வகைப் பண் வரிசையில் பாடல்கள் அமைந்துள்ளமையை நோக்கினால், தேவாரப் பாடல்களைப் போல், பரிபாடலும் பண்முறை பற்றித் தொகுக்குப் பெற்று, பாடகர்களால் பாடப் பெற்று வந்தன என்று கருத இடமுண்டு.*

**எழுதினர் பிழைப்பும் எழுத்துரு ஒக்கும்**
**பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்**

*என வரும் உரைச் சிறப்புப் பாயிரப் பகுதியும் இவை பண்ணோடு பாடப் பெற்றமையை வலியுறுத்தும்.*

*இந் நூலுக்கு உரை வகுத்தவர் பரிமேலழகர்.*

## பத்துப்பாட்டு

*சங்க காலத்திலுள்ள நெடும்பாடல்களின் தொகுப்பே பத்துப் பாட்டாகும்.*

*103 அடி முதல் 782 அடிகள் வரையுள்ள பத்து நூல்களின் தொகுப்பே பத்துப்பாட்டாகும்.*

*பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்கள் ஆகும்*

1. *திருமுருகாற்றுப்படை*
2. *பொருநராற்றுப்படை*
3. *பெரும்பாணாற்றுப்படை* — *ஆற்றுப்படை நூல்கள்*
4. *சிறுபாணாற்றுப்படை*
5. *கூத்தராற்றுப் படை*

*அகம் சார்ந்த நூல் மூன்று. அவை*

1. *முல்லைப்பாட்டு*
2. *குறிஞ்சிப் பாட்டு*
3. *பட்டினப்பாலை*

*புறம் சார்ந்த நூல் ஒன்று: மதுரைக் காஞ்சி*

*அகமும் புறமும் கலந்த நூல் ஒன்று: நெடுநல்வாடை பத்துப்பாட்டின் முதலும், கடைசியும் ஆற்றுப்படை நூல்கள்*

*முதல்நூல் : திருமுருகாற்றுப்படை*

*இறுதி நூல் : மலைபடுகடாம்*

*பத்துப்பாட்டில் செம்பாதி ஆற்றுப்படை நுல்கள்*

*பத்துப்பாட்டில் திணை அடிப்படையில் அமைந்த நூல் நான்கு*

*1. முல்லைப்பாட்டு 3. பட்டினப்பாலை*

*2. குறிஞ்சிப்பாட்டு 4. மதுரைக் காஞ்சி*

*பத்துப்பாட்டின் நகரத்தின் அடிப்படையில் பெயர் பெற்ற நூல்கள் இரண்டு*

*மதுரை - மதுரைக்காஞ்சி*

*காவிரிப்பூம்பட்டினம் - பட்டினப்பாலை*

*பத்துப்பாட்டைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை எட்டு. நக்கீரர் பாடிய நூல்கள் - இரண்டு*

*1. திருமுருகாற்றுப்படை 2. நெடுநல்வாடை*

*கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய நூல்கள் - இரண்டு*

*1. பெரும்பாணாற்றுப்படை 2. பட்டினப்பாலை*

*பத்துப்பாட்டு நூல்கள்: பத்துப்பாட்டு நூல்களை நினைவில் கொள்ள ஒரு பழம் பாடல் உள்ளது.*

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து**

*1. திருமுருகாற்றுப்படை - நக்கீரர் - 317 அடிகள்*
*2. பொருநராற்றுப்படை - முடத்தாமக் கண்ணியார் - 248 அடிகள்*
*3. சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார் - 269 அடிகள்*
*4. பெரும்பாணாற்றுப்படை - கடியலூர் உருத்திரங்கண்ணனார் - 500 அடிகள்*
*5. முல்லைப் பாட்டு - நப்பூதனார் - 103 அடிகள்*
*6. மதுரைக்காஞ்சி - மாங்குடி மருதனார் - 782 அடிகள்*
*7. நெடுநல்வாடை - நக்கீரர் - 188 அடிகள்*
*8. குறிஞ்சிப்பாட்டு - கபிலர் - 261 அடிகள்*
*9. பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார் - 301 அடிகள்*

10. மலைபடுகடாம் - பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் - 583 அடிகள்

**பத்துப்பாட்டு நூல்களும் - திணைகளும்**

1. முல்லைப் பாட்டு - முல்லைநிலம்
2. மதுரைக்காஞ்சி - பாலை
3. நெடுநல்வாடை - பாலை மற்றும் நெய்தல்
4. பட்டினப்பாலை - குறிஞ்சிநிலம்

**பத்துப்பாட்டு நூல்களும் - பாட்டுடைத் தலைவர்களும்**

1. திருமுருகாற்றுப்படை - செவ்வேள் (முருகன்)
2. பொருநராற்றுப்படை - கரிகால் பெருவளத்தான்
3. பட்டினப்பாலை - கரிகால் பெருவளத்தான்
4. சிறுபாணாற்றுப்படை - ஓய்மாநாட்டு நலிலியக் கோடன்
5. பெரும்பாணாற்றுப்படை - இளந்திரையன்
6. மலைபடுகடாம் - நன்னன் சேய் நன்னன்

பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் : முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டில் நீண்ட அடிகள் உடைய நூல் : மதுரைக் காஞ்சி

## பட்டிப்பாட்டின் சிறப்பு

1. பத்துப்பாட்டின் இலக்கியச் செழுமையை உணர்ந்த நச்சினார்க் கினியர்

   'சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்' என்று பாராட்டு கின்றார்.

2. பத்துப்பாட்டின் கற்பனை வளத்தினை பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ" என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளைய வர்கள் பாராட்டுகிறார்கள்.

3. முல்லைப்பாட்டு, பட்டினப் பாலைக்குச் சிறந்த ஆராய்ச்சி யுரை. எழுதி வெளியிட்டவர் மறைமலை அடிகள்

4. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை சங்கப்புலவர்களின் அகரவரிசையில் சங்க இலக்கிய நூல்களைத் தொகுத்து வெளியிட்டார்.

## ஆற்றுப்படை நூல்கள்

அறு + படை = ஆற்றுப்படை

*ஆறு : வழி, நெறி என்று பொருள்*

*ஆற்றுப்படை : வழிப்படுத்துதல் அல்லது நெறிப்படுத்துதல்*

*பரிசில் பெற்றப்புலவன் ஒருவன் பரிசில் பெற விரும்பும் புலவன் ஒருவனை இந்த வழியாகச் சென்று, இங்ஙனம் புகழ்ந்துபாடி பரிசில் பெறுக என்று ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையாகும்.*

*ஆற்றுப்படையின் இலக்கணத்தைத் தொல்காப்பியர்*

**‘கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்” என்று**

**(- புறத்திணையியல் - 36)**

*கூறுகிறார்.*

*சங்ககாலத்தில் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் அவரவர் இனத்தவரை நேரில் காணும்போது ஆற்றுப்படுத்தினர்*

*ஆற்றுப்படை நூல்களில் புறத்திணைகளில் ஒன்றான பாடாண் திணை மட்டுமே வரும்.*

*புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும் ஆற்றுப்படையின் சாயல் காணப்படுகிறது.*

*பத்துப்பாட்டில் செம்பாதி நூல்கள் ஆற்றுப்படை நூல்களே.*

*ஆற்றுப்படை நூல் 248 அடி முதல் 588 அடி வரையுடையதாகும்.*

## 1. திருமுருகாற்றுப்படை

1. *பத்துப்பாட்டில் முதலில் இடம்பெறும் நூல்*
2. *பத்துப்பாட்டு நூல்களுக்கு கடவுள் வாழ்த்துப் பாடல் போன்று அமைந்துள்ளது.*

| | |
|---|---|
| *திணை* | *: புறத்திணை* |
| *பாவகை* | *: ஆசிரியப்பா* |
| *அடிகள்* | *: 317 அடிகள்* |
| *நூல் ஆசிரியப்பா* | *: நக்கீரர்* |
| *பாட்டுடைத் தலைவர்* | *: செவ்வேல் (முருகன்)* |
| *சிறப்புப் பெயர்* | *: முருகு, புலவராற்றுப்படை* |
| *நூலின் தொடக்கவரிகள்* | *: உலகம் உவப்ப புலனேர்பு திரிதகு* |

## சிறப்புக்கள்

1) முருகாற்றுப்படை என்னும் தொடருக்கு முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்று பொருள்.

2) துன்பப் படுவோரைக் காக்க முருகனிடம் ஆற்றுப்படுத்துவது முருகாற்றுப்படை.

3) வீடுபேறு பெற்ற இரவலன் ஒருவன் வீடுபேறு பெற விழையும் இன்னொரு இரவலனை முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவது திருமுருகாற்றுப்படை.

4) சைவத் திருமுறைகளுள் 11-வது திருமுறையாக வைத்துப் போற்றப்படுகிறது.

5) சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் இந்நூலைப் பாராயணம் (மனப்பாடம்) செய்வர்.

## திருமுருகாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன்

1. செந்தமிழ் நிலத்து தமிழக் கடவுள் முருகன்.

2. சேயோன் மேய மைவரையுலகமும் - என்று சொன்ன தொல்காப்பியர் சொன்ன குறிஞ்சி நிலத் தெய்வம் - முருகன்

3. 'குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்' என்பது தமிழர் பழமொழி.

## நூல் பகுப்பு

திருமுருகாற்றுப்படை முருகன் எழுந்தருளி இருக்கும் அறுபடை வீடுகளையும், வழிபாட்டு முறைகளையும் எடுத்துக்கூறும் அழகிய நூலாகும்.

பாடல் அமைப்பு: 1 முதல் 66 அடிகள் - முருகனின் பெருமை 67-77 அடிகள் திருப்பரங்குன்றம்

78 - 125 அடிகள் - திருச்சீரலைவாய்

126 - 176 அடிகள் - திருஆவினன்குடி

177 - 189 அடிகள் - திருவேரகம்

190 - 217 அடிகள் - குன்றுதோறாடல்

218 - 317 அடிகள் - பழமுதிர்சோலை

1. திருப்பரங்குன்றம் : முருகனின் திருக்கோலம், சூரனை வதம் செய்தது, திருப்பரங்குன்றம் இயற்கை வளம்.

2. திருச்சீரலைவாய் : முருகனின் ஆறுமுகமும், பன்னிரு கைகளின் செயல்கள்.

3. திருஆவினன்குடி : முருகனை வழிபடும் மகளிரின் சிறப்புகள், முருகனை வழிபடும் முனிவரின் பெருமைகள்

4. திருவேரகம் : முருகனை வழிபடும் அந்தணர்களின் செயலும், வழிபடும் முறையும்.

5. குன்றுதோறாடல் : குன்றக்குரவை, குன்றக் குரவையாடும் மகளிர் அழகுச் சிறப்பு.

6. பழமுதிர்சோலை : முருகனின் அறுபடை வீடுகள், ஆற்றுப் படுத்தும் முறைகள் - முருகன் அருளும் முறை - பழமுதிர் சோலை அருவியின் அழகு.

## 2) பொருநராற்றுப்படை

| | | |
|---|---|---|
| திணை | : | புறத்திணை (பாடாண்திணை) |
| பா | : | ஆசிரியப்பா (வஞ்சியடிகள் கலந்தது) |
| அடிகள் | : | 248 வரிகள் |
| நூற்புலவர் | : | முடத்தாமக் கண்ணியார் (பெண்பாற் புலவர்) |
| பாட்டுத்தலைவன் | : | சோழன் கரிகாற் பெருவளத்தான் |

### பொருநர் - விளக்கம்

'பொருநர்' என்னும் சொல்லுக்கு 'வீரர்' அல்லது மற்றொருவர் போல் வேடம் கொண்டவர் என்று பொருள்.

### பொருநர் - பிரிவு

'பொருநர்' என்னும் சொல்லுக்குப் புகழ்ந்து பாடுபவர் எனவும் பொருள் கொள்ளலாம். இவர்களை

1. ஏர்க்களம் பாடுவோர் : வேளாண் தொழில் பற்றிப் பாடுபவர்
2. போர்க்களம் பாடுவோர் : போர்க்களத்திற்கு நேரில் சென்று போரினைப் பார்த்து பாடுபவர்.
3. பரணி பாடுவோர் : சோழன் கரிகால் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது.

### பொருநர் ஆற்றுப்படை விளக்கம்

1. போர்க்களம் பாடும் பொருநர் பற்றிக் கூறுவது.
2. பரிசில் பெற்ற பொருநன் ஒருவன் பரிசில் பெறவிழையும் மற்றொரு பொருநனை சோழன் கரிகாலனிடம் ஆற்றுப்படுத்தியது.

## நூலின் தொடக்க வரிகள்

## சிறப்புக்கள்

1. நெசவாளர்கள் உருவாக்கும் மெல்லிய ஆடைகளை "அரவுரியன்ன அறுவை" என்று குறிப்பிடுகிறது.

2. விருந்தினரை வரவேற்கும் தமிழரின் பண்பாட்டு மரபினையும், அவர்களை வழியனுப்பும் அழகிய மரபினையும் 'காலின் ஏழடிப் பின்சென்று' (பொ.ஆ. 166 - அடி) என்ற வரியின் மூலம் எடுத்துச் சொல்கிறார்.

3. பொருநரின் இசையாற்றல் ஆறலைக் கள்வரையும் மதி மயங்கச் செய்ததால், தான் செய்தொழிலை விட்டொழிந்ததை

**"ஆறலைக் கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவுஇன பாலை"** **(பொ.ஆ. 21-22)**

4. சோழன் கரிகாலன் நரைமுடித்து முறை செய்த வரலாற்றை

**"முதியோர்**
**அவைபுகு பொழுதில் தன்பகை முரண் செலவும்"**

என்ற வரிகள் எடுத்துச் சொல்கிறது.

5. சோழன் கரிகாலனின் வெற்றி, கொடை, புகழ் வெண்ணிப் போர் வெற்றி, தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தியாமை போன்ற வையும் அழகுறக் கூறப்படுகிறது.

6. பொருநனுடன் வரும் பாடினியின் அழகு தலைமுடி முதல் பாதம் வரையில் உள்ள 19 உறுப்புக்கள் கேசாதி பாதமாக 18 அடிகளில் வருணிக்கப்படுகின்றன.

1. கூந்தல் - ஆற்றுமணல்
2. நுதல் (நெற்றி) - எட்டாவது பிறை
3. புருவங்கள் - வில்
4. கண்கள் - மழை
5. வாய் - இலவம் பூ
6. பற்கள் - முத்து
7. காதுகள் - மகரக்குழைகள்
8. கழுத்து - நாணத்தால் தவிழ்ந்திக்கும்
9. தோள்கள் - மூங்கில்
10. முன்கைகள் - சிறிய மயிர் ஒழுங்குபட்டவை
11. முன்விரல்கள் - காந்தள் மலர்

12. நகங்கள் - கிளியின் வாய்
13. மார்பகங்கள் - பிறருக்கு வருத்தம் விளைவிப்பவை
14. கொப்பூழ் - நீர்ச்சுழி
15. இடை - உண்கடன்று உணரப்படாதது
16. அல்குல் - மேகலை அணியப்பட்டது
17. தொடைகள் - யானையின் துதிக்கை
18. கணைக்கால் - மயிர் ஒழுங்குபட்டவை
19. பாதங்கள் - ஓடி இளைத்த செந்நாயின் நரக்கு

## 3) சிறுபாணாற்றுப்படை

| | | |
|---|---|---|
| திணை | : | புறத்திணை (பாடாண்திணை) |
| பா | : | ஆசிரியப்பா |
| அடிகள் | : | 269 அடிகள் |
| பாடியபுலவர் | : | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் |
| பாட்டுடைத்தலைவன் | : | ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் |

## பொருள் விளக்கம்

'இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ' என்ற அடி இடம் பெறுவதாலும், பெரும் பாணாற்றுப்படையைவிட அடிவரையில் சிறியதாகக் காணப்படுவதாலும், சிறுபாணனை ஆற்றுப்படுத்திய தாலும் இந்நூல் சிறுபாணாற்றுப்படை.

### பாணர்கள் வகை

1. அழகிய பண்களைப் பாடுபவர்கள் பாணர்கள் என்றழைக்கப் பட்டனர். இந்தப் பாணர்கள் மூன்று வகையாகப் பிரிப்பர். அவை

   1) இசைப்பாணர்
   2) யாழ்ப்பாணர்
   3) மண்டைப்பாணர் (இரந்துண்டு வாழ்பவர்)

### இசைப்பாணர்:

இசைத் தொழிலையுடையவர்கள்.

### 2. யாழ்ப்பாணர்

சிறுபாணர் - சிறியயாழை வைத்திருப்பவர்.

பெரும்பாணர் - பெரிய யாழை வைத்திருப்பவர்.

சிறுபாணாற்றுப்படை - விளக்கம்

1. *சிறுபாணனை ஆற்றுப்படுத்தியது*

2. *பரிசில் பெற்ற சிறுபாணன் ஒருவன் பரிசில் பெற விரும்பும் சிறுபாணனை ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடம் ஆற்றுப் படுத்தியது.*

## நூலின் தொடக்க வரிகள்

## சிறப்புக்கள்

1. *ஓய்மா நாட்டு நல்லியக்கோடனின் தலைநகரம் மாவிங்கை அந்த 'ஓய்மா நாடு' மூவேந்தர்களின் நகரத்தைவிட செல்வச் செழிப்பாக இருப்பதை*

**"வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே**
**மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே**
**ஓடாய் பூட்கை உறந்தையும் வறிதே"**

*என்று பாடுகிறார்.*

2. *வறுமையின் அவலத்தை நயத்தக்க நாகரிக முறையில் வருணிக்கிறார் நூலாசிரியர்.*

**"திறாவக் கண்ண தூய்செவிக் குறளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**காழ்சோர் முதுசுவர்க் கணிச்சிதல் அரித்த"**

*என்ற பாடல் வரிகளால் விளக்குகிறார்.*

3. *கடையெழு வள்ளலின் சிறப்பினையும் அவர்களுக்குப் பிறகு நல்லியக்கோடனே வள்ளல் தன்மையில் சிறந்து விளங்குகிறான் என்பதை,*

**"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்"** **(சிறுபாண் 112-113)**

*என்ற வரியால் விளக்குகிறார்.*

4. *கடையெழு வள்ளல்களையும் தொகுத்துக்கூறும் நூல் சிறுபாணாற்றுப்படையாகும்.*

   1. *பேகன் - மயிலுக்குப் போர்வை அளித்தவன்*
   2. *பாரி - முல்லைக்குத் தேர் அளித்தவன்*
   3. *காரி - இரவலர்க்குக் குதிரை அளித்தவன்*
   4. *ஆய்அண்டிரன் - சிவபெருமானுக்கு நீலமணியையும், நாகம் தந்த கலிங்கத்தையும் அளித்தவன்*
   5. *அதியமான் - ஔவையாருக்கு கருநெல்லிக்கனி அளித்தவன்.*

6. நள்ளி - நாடி வந்தவர்களிடம் உள்ளத்தைக்கூறி நகைக்கச் செய்தவன். ஏராளமானப் பொருட் களை வாரி வழங்கியவன்.

7. ஓரி - இரவலர்க்கு நாடுகளைப் பரிசிலாக வழங்கியவன்.

5) மூவேந்தர்களின் பெருமையும் அவர்களின் தலைநகரங் களையும்

சேரன் - ''எழுவுறழ் திணிதோர் இயல்தேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே''
(சிறுபாண் 49 - 50)

பாண்டியன் - தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும்
(சிறுபாண் 66-67)

சோழன் - நாடாநல்லிசை நல்தேர்ச்செம்பியன்
ஓடாப்பூட்கை உறந்தையும் வறிதே
(சிறுபாண் 82-83)

6) விறலியின் பத்து உறுப்புக்களும் கேசாதிபாத வருணனை சங்கிலித் தொடர் போல அழகுற புனையப்பட்டுள்ளது.

''நெய்கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில் மயிற் குளிக்கும் சாயல்...... (சிறுபாண் 14-16)

மழைமேகக் கூந்தல், மயில் போன்ற சாயல், அடிகள், கன்னம், நுதல், நோக்கு, பல் முதலியவை வருணிக்கப்படுகிறது.

7) உப்பு வணிகர்கள் வண்டிகளில் உப்பு மூட்டையை ஏற்றிச் செல்லும் போது தன் மனைவி மற்றும் குழந்தைகளுடன், பிள்ளை போல் வளர்த்த மந்தியையும் அழைத்துச் சென்றதையும் இந்நூல் குறிப்பிடுகிறது.

8) அரண்கள் தேவர்களிடமிருந்து பெற்ற தூங்கெயிலை அழித்த கொடித்தோள் செம்பியனை "தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை நாடா நல்லிசை நல்தேர்ச் செம்பியன் (சிறுபாண் 81-82).

ஓய்மா நாட்டு நல்லியக்கோடனை நல்லூர் நத்தத்தனரால் பாடியது.

## 4) பெரும்பாணாற்றுப்படை

| | |
|---|---|
| *திணை* | *: புறத்திணை (பாடாண்திணை)* |
| *பா* | *: ஆசிரியப்பா* |
| *அடிகள்* | *: 500 அடிகள்* |
| *பாடிய தலைவர்* | *: கடியலூர் உருத்திரங்கண்ணனார்* |
| *பாட்டுடைத்தலைவன்* | *: தொண்டைமான் இளந்திரையன்* |
| *சிறப்புப்பெயர்* | *: பாணாறு (நீண்ட அடிகளை உடைய நூல்)* |

### பொருள் விளக்கம்

*'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' என்ற (பெரும்பாண்: ) தொடர் குறிப்பும், நீண்ட அடிவரையறையை உடையதாலும் இந்நூல் பெரும்பாணாற்றுப்படை என்று அழைக்கப்பட்டது.*

### பாட்டுடைத்தலைவன்

1. *குறுநில மன்னன் தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது.*
2. *இளந்திரையன் பற்றி பல்வேறு கருத்துக்களைப் பல்வேறு அறிஞர்கள் கூறுகின்றனர்.*

### பெரும்பாணாற்றுப்படை விளக்கம்

1. *பெரிய யாழை வைத்திருக்கும் பாணர்கள் பெரும்பாணர்கள் என்றழைக்கப்பட்டனர்.*
2. *பரிசில் பெற்ற பெரும்பாணன் ஒருவன் பரிசில் பெற விளையும் மற்றொரு பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியதால் பெரும்பாணாற்றுப் படை என்றழைக்கப்படுகிறது.*

### சிறப்புகள்

1. *சிறந்த சொல்லாட்சிகள் மிகுந்த அழகு நூல் பெரும்பாணாற்றுப் படையாகும்.*

| | |
|---|---|
| *பலாப்பழம்* | *- சிறுசுழைப் பெரும்பழம்* |
| *முயல்* | *- நெடுஞ்செவி குறுமுயல்* |
| *சோலை* | *- வெயில் நுழைவு அறியாக்குயில் நுழை பொதும்பு* |

2. *கடலில் திரியும் கலங்களைக் கரைந்து அழைக்கும் விளக்கம் தான் கலங்கரை விளக்கமாகும்.*

"இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்"

3. *இளந்திரையன் பகைவர்களைப் போர்க்களத்தில் வென்று பாணர் முதலியோர்க்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மையை*

"மள்ளர் மள்ள! மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந" (பெரும்பாண் - 455 - 456)

4. *விருந்தோம்பல் பண்பில் தலைசிறந்து விளங்கியதையும், சுவையான உணவை விண்மீன்கள் போன்ற ஒளிரும் கலங்களில் பரப்பி அளித்ததை,*

மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பில் தான்நின்று ஊட்டி" (பெரும்பாண்: 478 - 479)

*மகிழ்வான் என்கிறார்.*

5. *ஐந்திணைகளிலும் காணப்படும் வீடுகளின் அமைப்பும், ஐந்திணை மக்களின் விருந்தோம்பல் பண்பும், விருந்து உபசரிக்கும் போது அளிக்கப்படும் உணவுப் பொருட்களும் அழகுற விளக்கப் பட்டுள்ளது.*

1. *முல்லைநிலம் - கோவலர் வீடு - வரகுலைக்கோலால் வேயப்பட்ட குடில்*
2. *மருதநிலம் - வேளாளர் - வைக்கோலால் வேயப்பட்ட குடில்*
3. *நெய்தல்நிலம் - வலைநர் - தருப்பைப் புல்லால் வேயப்பட்ட குடில்*
4. *பாலைநிலம் - எயினர் - ஈந்தின் இலை, ஊகம் புல்லால் வேயப்பட்ட குடில்*
5. *அந்தணர் குடியிருப்பு - சாணம் மொழுகப்பட்ட தரை, பந்தல்*

ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை (பெரும். 88) எயினர்
ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின் (பெரும். 122)
"கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர் (பெரும். 191) உழவர்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில் (பெரும். 225)
"செழுங்கன்றுயாத்த சிறுதாட் பந்தர் (பெரும். 297) அந்தணர்

6. *மோர் விற்கும் ஆய்மகள் நெய்க்குக் கிடைக்கும் விலையைப் பொன்னாகப் பெற விரும்பாமல் எருமைக் கன்றுகளையே வாங்க விரும்புவதை*

"குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி

நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்" (பெரும். 162-165)

## உணவு - விருந்தோம்பல்

1. குறிஞ்சிநில மக்கள் - ஏற்றை அறுத்து உணவு, நெல்லால் காய்ச்சிய கொழியல் அரிசிகள்
2. முல்லைநில மக்கள் - வரகு அரிசி சோறு, அவரைப் பருப்பும்
3. மருதநில மக்கள் - வெண்மையான நெற்சோறு, கோழிப் பொரியல்
4. நெய்தல்நில மக்கள் - புல்லரிசி உணவு, உப்புக்கண்டம், மீன், இறால் உணவு
5. பாலைநில மக்கள் - ஈத்தின் விதை போன்ற சிவந்த சோறும், உடும்புக்கறி, முயல் உணவு, பன்றி உணவு

அந்தணர் இல்லம் - கருடச் சம்பா உணவு, நெய்ச்சோறு, மாதுளைப் பொரியல், மாவடு ஊறுகாய்

## 5. கூத்தராற்றுப்படை - மலைபடுகடாம்

| | | |
|---|---|---|
| திணை | : | புறத்திணை (பாடாண்திணை) |
| பாவகை | : | ஆசிரியப்பா |
| அடிவரையறை | : | 583 வரிகள் |
| பாடிய புலவர் | : | பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் |
| பாட்டுடைத் தலைவன் | : | நன்னன் சேய் நன்னன் |
| வேறுபெயர் | : | மலைபடுகடாம் |
| சிறப்புப்பெயர் | : | பயண இலக்கியத்தின் முன்னோடி நூல் |

## பொருள் விளக்கம்

**'மலைப்படு கடாஅம் மாதிதத்து இயம்ப'**

என்ற சொல்லாட்சி இடம் பெறுவதால் இந்நூல் மலைபடுகடாம் என்றழைக்கப்படுகிறது. மலைக்கு யானையை உவமித்து அதன் கண் உண்டாகும் ஓசைகளைக் 'கடாம்' என்று சிறப்பித்ததால் இந்நூல் மலைபடுகடாம் எனப்பெயர் பெற்றது. கடாம் என்ற சொல்லுக்கு மதம் என்றும், யானையின் வாயில் இருந்து ஒழுகும் நீர் என்றும் பொருள். இது ஆகுபெயரால் ஆனதால் இங்கு ஓசையை உணர்த்திற்று.

## கூத்தராற்றுப்படை

1. *கூத்தரை ஆற்றுப்படுத்துவதால் இதனைக் கூத்தராற்றுப்படை என்றும் கூறுவர்.*

2. *பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன் பரிசில் பெற விரும்பும் மற்றொரு கூத்தனை நன்னன் சேய் நன்னனிடம் ஆற்றுப்படுத்துவதால் இந்நூல் கூத்தராற்றுப்படை.*

## சிறப்புக்கள்

1. *மதம் கொண்ட யானையின் முழக்கம் போன்று மலையில் கேட்கும் பல்வேறு ஓசைகளை இந்நூல் 56 அடிகளில் தொகுத்துக் கூறுகிறது.*

2. *நூல் முழுவதும் ஏராளமான அழகிய உவமைகளைப் பல இடங்களில் ஆசிரியர் சிறப்பாகக் கையாண்டு உள்ளார்.*

"பகுத்து வைத்தன்ன பாறை மருங்கின்
எடுத்து நிறுத்தன்ன இட்டரும் சிறுநெறி" (மலைபடு: 15-16)

*என்ற அடிகளில் படுத்திருப்பது போன்றதொரு பாறையும், அதன் அருகே செங்குத்தான பிறிதொரு பாறையையும் அழகாக வருணித்துக் கூறுகிறார்.*

3. *கூத்தர்கள் தங்களின் அழகிய கைகளில் பேரியாழைத் தம்முடன் வைத்திருந்ததையும், கதிர் போன்ற துளைகள், சுள்ளாணிகள், பத்தல், யானைக்கொம்பு யாப்பு, பொல்லம் கோடு, வனர் போன்ற உறுப்புக்களைக் கொண்டிருந்ததை விளக்குகிறார்.*

4. *ஒன்பது என்ற எண்ணைத் 'தொண்டு' என்ற பெயரால் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.*

"தொடித் திரிவு அன்ன தொண்டு படுதிவவின்"

(மலைபடு - 21 வரி)

*பேரியாழில் காணப்படும் 'திவவு' என்னும் உறுப்பில் ஒன்பது வார்க்கட்டு இருக்கும் என்பதைக் குறிக்க 'தொண்டு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

5. *கூத்தர்கள் பயன்படுத்தும் பல்வேறு இசைக் கருவிகளைக் காவடியின் இருபுறமும் தொகுத்துக்காட்டிக் கொண்டு செல்வதைக் கூறும் இடத்தில் பல்வேறு விதமான இசைக் கருவிகளின் பெயரைக் குறிப்பிடுகிறார் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.*

1. தோல் கருவிகள் - முழவு (பாறை), ஆகுளி (சிறுபறை), பதலை (மாக்கிணை, தபேலா)

2. துளைக்கருவிகள் - கோடு (கொம்பு), தூம்பு (நெடுவங்கியம்), குழல் (புல்லாங்குழல் - வாக்கியம்)

3. நரம்புக் கருவிகள் - யாழ்

4. கஞ்சக்கருவி - பாண்டில் (ஜால்ரா)

5. நன்னன் சேய் நன்னனின் நாட்டிற்குச் செல்லும் மலைப்பாதையில்

பன்றிகளைப் பிடிக்க - பன்றிப்பொறிகளும்

பரல்கற்கள் நிரம்பிய குழிகளில் - பாம்புகளும்

மறைந்திருக்கும் அதனால் மிகுந்த எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும்.

தினைப்புனத்தைக் காவல் காக்கும் குறவர்கள்.

யானைகளை விரட்ட - கவண்கற்கள் வீசுவர்

காட்டாற்று வழியில் - வழுக்கும் இடங்கள்

செல்லும் வழியில் - நடுகற்களும் காணப்படும்

இவற்றைக் கவனமுடன் கடந்து செல்ல வேண்டும்.

புதியவர்கள் பாதுகாப்பான முறையில் சென்று வருவதற்காகவும், பின்னால் தொடர்ந்து வருபவர்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் முன்னால் செல்பவர்கள் செடி, கொடி, புல்லின் நுனிப்பகுதியில் முடித்துக் கொண்டு போகும் முறையினை அழகுற எடுத்துக்கூறுகிறது.

7. நன்னனது அரண்மனை முற்றத்தில்

விலங்குகள் - ஆமாவின் கன்று, யானைக்கன்று, கரடிக் குட்டி, மலையாடு, கிடாய், கீரிப்பிள்ளை, மான்கன்று, ஆண் உடும்பு, மயில், கானாங் கோழி, சேவல்

பழங்கள் - பலாப்பழம், மாம்பழம்

மலர்கள் - சுரபுன்னை, காந்தள்

பிறபொருட்கள் - நாறைக்கொடி, நாறைக்கிழங்கு, மாணிக்கம், யானைத் தந்தங்கள், சந்தனம், மிளகு, தயிர், தேன் அடைகள் போன்றவை குவிந்து கிடக்கும் என்று விளக்கிக் கூறுகிறது.

7. மலையின் அழகினையும், ஓசைகளையும், சிறப்பினையும் இந்நூல் கூறுவது போன்று வேறு எந்த நூலும் இதுவரையிலும் எடுத்துக் கூறவில்லை.

## அகம் சார்ந்த நூல்கள்

பத்துப்பாட்டு நூல்களில் அகம் சார்ந்த நூல்கள் மூன்றாகும். அவை, 1. முல்லைப்பாட்டு, 2. குறிஞ்சிப்பாட்டு, 3. பட்டினப்பாலை

## 1. முல்லைப்பாட்டு

| | | |
|---|---|---|
| திணை | : | அகத்திணை |
| அகத்திணைப்பிரிவு | : | முல்லைத்திணை |
| பா வகை | : | ஆசிரியப்பா |
| அடியெல்லை | : | 103 வரிகள் |
| பாடிய புலவர் | : | நப்பூதனார் (காவிரிப்பூம் பட்டினத்துப் பெண் வணிகனார் மகன்) |
| சிறப்புப்பெயர் | : | நெஞ்சாற்றுப்படை |
| சிறப்புக்கள் | : | 1. பத்துப்பாட்டு நூல்களில் குறைந்த அடி களைக் கொண்ட நூல். |
| நூல் பகுப்பு | : | 2. முதல் 23 அடிகள் - தலைவியின் பிரிவுத் துயர் 24 முதல் 78 அடிகள் - பாசறையில் தலைவன் இருத்தல் 79 - 89 அடிகள் தலைவியின் அவல நிலை<br>90 - 103 அடிகள் - கூதிர் காலத்தில் தலைவன் வீடு திரும்புதல் முல்லைப்பாட்டின் பொருள் |

## முல்லைப்பாட்டின் பொருள்

1. முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளை இருத்தல் ஒழுக்கத் தைச் சிறப்பித்துக் கூறும் நூல்.
2. பொருள் காரணமாகவோ, போர் காரணமாகவோ பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரும் வரையில் ஆற்றியிருக்கும் முல்லைத் திணையின் கற்பு ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறும் நூல்.

## நூல் சிறப்புக்கள்

1. கார்காலத் தொடக்கத்தில் காணப்படும் மேகத்தின் தோற்றத் தினை 'நீர் செல நிமிர்ந்த மாஅல் போல' என்ற புராண், இதிகாச கருத்தின் மூலம் அழகாக விளக்குகிறார்.

*மூன்றடி மண் பொருட்டு மாவலியுடன் வந்த திருமால், மாவலி யிடம் இருந்த குறைந்த அளவுக்கு நீரை உள்வாங்கி நிமிர்ந்து நின்று வானத்தை எட்டியது போல கடல் நீரைக் குடித்த மேகமும் உயரே எழுந்தது என்கிறார்.*

2. *'இன்னே வருகுவார் தாயர்' என்ற அடிகளில் பழந்தமிழர்களின் நற்சொல் கேட்டல், விரிச்சிப் பார்த்தல் பழக்க வழக்கத்தினை எடுத்துச் சொல்கிறது.*

3. *பாசறை அமைப்பு - பாசறைப் பள்ளியமைப்பு - யானைப் பாகர்கள் வடமொழியில் யானைப் பழக்கும் முறை - நாளிகைக் கணக்கர் (ஒரு நாள் - 24 நிமிடம்) - மெய்க்காப்பாளர் பற்றியும் அழகுற விளக்குகிறது.*

4. *மிலேச்சர்களை 'உடம்பின் உரைக்கும் உரையா நாவின் படம்புகு மிலேச்சர்...' என்று அழகுற வருணிக்கிறது.*

5. *கண்களைப் பாதுகாக்கும் இமைபோல அரசனுக்குப் பாதுகாவலராய் யவனர்கள் (கிரேக்கர்கள்) இருக்கிறார்கள் என்பதை*

**"வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்"** **(முல்லை - 61)**

*என்று யவனரின் திறம் வருணிக்கப்படுகிறது.*

6. *தலைவியின் அவல நிலையினைக் கவின்யுற எடுத்துக் கூறுகிறது.*

**"நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு**
**நீடு நினைந்தேற்றியும் ஓடுவளை திருத்தியும்"**

**(முல்லை 81-82)**

7. *தலைவனின் கடமையுணர்ச்சியினை 'ஒரு கை பள்ளி ஒற்றி ஒரு வகை முடியோடு கடகம் சேர்த்தி நெடிது நினைத்து' இருக்கும் என்று அழகுற விளக்குகிறது.*

8. *அரசன் சென்ற காட்டுவழி கானம் நந்திய செந்நிலப் பெருவழி என அழகுறக் கூறுகிறது.*

## 2. குறிஞ்சிப்பாட்டு

| | | |
|---|---|---|
| *திணை* | : | *அகத்திணை* |
| *அகத்திணைப்பிரிவு* | : | *குறிஞ்சித்திணை* |
| *துறை* | : | *அறத்தொடு நிற்றல்* |
| *பாவகை* | : | *ஆசிரியப்பா* |
| *அடியெல்லை* | : | *261 அடிகள்* |

*பாடிய புலவர்* : *கபிலர்*

*ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தல் பொருட்டு, கபிலர் பாடியது.*

*சிறப்புப்பெயர்கள்* : *காப்பியப்பாட்டு, நச்சினார்க்கினியர் 'பெருங் குறிஞ்சி' என்று சிறப்பிக்கிறார். இயற்கையை வருணிப்பதில் உலகிலேயே தலை சிறந்தவர் கபிலர் என்கிறார் தனிநாயக அடிகளார்*

## குறிஞ்சிப் பாட்டின் பொருள்

1. *குறிஞ்சி நிலத்தின் மலையும், கருப்பொருள்களும், புணர்தல் ஆன உரிப்பொருளையும் இரண்டறக் கலந்து இந்நூல் முழுக்கப் பாடுவதால் குறிஞ்சிப்பாட்டு ஆகும்.*

2. *தலைவி தலைவன் மீது கொண்ட காதலையும், களவொழுக்கத் தையும் தோழி செவிலித் தாய்க்குக் கூறி அறத்தொடு நிற்பதாகக் குறிஞ்சிப்பாட்டு தொடங்குகின்றது.*

3. *செவிலித் தாயிடம் தோழி உளவியல் அணுகுமுறையிலும், மிகுந்த கவனத்துடனும்தான் அறத்தொடு நின்றான்.*

**"இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்**
**வினையிடை நின்ற சான்றோர் போல**
**இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலென்"** **(குறிஞ்சி 27-29)**

*இருபெரு வேந்தர்களுக்கு இடையே செயல்படும் சான்றோர்போல் கவனத்துடனும், பொறுப்புடனும், ஆளுமையுடனும் செயல்பட்டாள்.*

4. *முப்பதிற்கும் மேற்பட்ட உவமைகளைக் கபிலர் குறிஞ்சிப் பாட்டில் பயன்படுத்தியுள்ளார்.*

**"அவிர்துகில் புரையும் அவ்வெள்ளருவி**
**பளிங்கு சொரிவன்ன பாய்சுனை**
**செந்தீ யொண்பூம் பிண்டி"** **(குறிஞ்சி 55-57)**

*என்பன போன்ற தொடர்கள் குறிஞ்சிப் பாட்டின் அழகிய சொற்ச் சித்திரங்களாகும்.*

5. *மலையில் தினைப்புலன் காக்கச் சென்ற குடத்தில் சுனையில் நீராடிய தலைவியும் தோழியும் 99 வகை மலர்களைப் பறித்து அங்கிருந்த பாறையில் குவிந்ததை*

**"ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்**
**தண் கயக்குவளை குறிஞ்சி வெட்சி**
**செங்கொடு வேரி தேமா மணிச்சிகை"** **(கு.பா. 62-64)**

எனத்தொடங்கி 61 அடி முதல் 95 அடிவரையிலான 34 அடிகளில் 94 வகையான மலர்களை அழகுற எடுத்துரைக்கிறார்.

6. தமிழரின் விருந்தோம்பல் பண்பினை அழகுற எடுத்துக் கூறுகிறது குறிஞ்சிப்பாட்டு.

**"விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னொடு உண்டலும் புரைவது"** **(கு.பா. 206-207)**

விருந்தினர் அனைவருக்கும் உணவளித்தப் பின்பு எஞ்சிய சோற்றைத் தலைவன் தலைவியுடன் சேர்ந்து மகிழ்ந்து உண்டதை விளக்குகிறது.

7. பழந்தமிழர்களின் திருமண மரபில் களவுத் திருமணமும், கற்புத் திருமணங்களும் நடந்தேறியுள்ளன. கற்புத் திருமணத்தின் பெண்வீட்டார் பெண் கொடுக்கும் போது மணமகன் வீட்டைப் பற்றி விசாரிக்கும் பழக்கத்தினை

**"கொடுப்பின் நன்குடைமையும் குடி நிரல் உடைமையும்**
**வண்ணமும் துணையும் பொரீஇ"**

என்ற அடிகள் எடுத்துக் கூறுகின்றன.

## 3. பட்டினப்பாலை

| | | |
|---|---|---|
| திணை | : | அகமும் புறமும் கலந்தது |
| உட்பிரிவுத்திணை | : | நெய்தலும், பாலையும் |
| துறை | : | பொருள்வயின் பிரியக் கருதிய தலைவன் செலவழுங்கியது (பிரிவு தவிர்த்தல்) |
| பாவகை | : | ஆசிரியப்பா கலந்து வரும் வஞ்சிப்பாட்டு |
| பாடிய புலவர் | : | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| பாட்டுடைத் தலைவன் | : | சோழன் கரிகால் பெருவளத்தான் |
| அடிகள் | : | 301 வரிகள் |
| | | 163 அடிகள் - வஞ்சி அழகள் |
| | | 138 அடிகள் - ஆசிரியப்பா |
| சிறப்புப்பெயர் | : | வஞ்சி நெடும் பாட்டு |

## பட்டினப் பாலையின் பொருள்

பாலைத் திணையின் சிறப்பினையும், காவிரிப் பூம்பட்டினத்தின் இயற்கை வளத்தையும் இரண்டறக் கலந்து கூறுவதால் இப்பெயர் பெற்றது என்பர். நெய்தல் திணையின் முதல் பொருளும், உரிப்

*பொருளும் பாலைத் திணையின் முதற்பொருளும் உரிப்பொருளும் நூல் முழுக்கப் பாடப்படுவதோடு காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பையும் இணைத்துப் பாடுவது பட்டினப்பாலை.*

## பட்டினப் பாலையின் சிறப்பு

1. *காவிரியாற்றின் பொய்யா மழையையும், காவிரியாற்றின் கரையெங்கும் அமைந்திருக்கும் வயல் வெளியின் சிறப்பினை அழகுற எடுத்துக் கூறுகிறது.*

“வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்” (பட்டின: 5-8)

2. *பழந்தமிழகத்தின் பண்டமாற்று வணிகமுறையினையும் எடுத்தியம்புகிறது.*

“வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி” (பட்டின: 29-30)

*உமணர்கள் கடலில் விளைந்த உப்புக்கு மாற்றாக நெல்லொடு திரும்பினர் என்று கூறுகிறது.*

3. *காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற ஏற்றுமதி வணிகம், மக்கள் பழக்க வழக்கங்கள், பல்வேறு நாட்டினர் பேசிய பல்வேறு மொழிகள் பழக்கத்தில் இருந்ததையும் எடுத்துக்கூறுகிறது.*

“மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்” (பட்டின 216-218)

4. *வாணிகப் பெருமையையும், முறைப்படி முத்திரை பதித்து சுங்கவரி வசூலித்ததையும் அழகுற எடுத்துக்கூறுகிறது.*

“மாரிபெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
..........
புலிபொறித்துப் புறம் போக்கி” (பட்டின 128-135)

5. *கடலின் வழியாக உள்நாட்டு, வெளிநாட்டு, அயல்நாட்டு வாணிகம் சிறப்பாக நடைபெற்றதையும்,*

“நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குனகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
.........
தமவும் பிறவும் ஒப்பநாடி
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது" (பட்டின: 185 - 210)

*மிக நேர்த்தியாக நடந்த வாணிகம் பற்றிப் புகழ்ந்துரைக்கிறது.*

6. *கொள்ளையின்பம் பயக்கும் மின்னற் சொற்றொடர்கள் ஏராளம் இடம்பெறுகிறது.*

"குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப" (பட்டின: 156- 157)

*என்றும்,*

"காடுகொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி" (பட்டின: 283- 284)

7. *பட்டினப்பாலை நூலின் சிறப்பினையும் உள்ளார்ந்த பொருளினையும், செல்வச் செழிப்புடைய நாடுகள் அனைத்தும் கிடைப்பினும் நான் தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் என நெஞ்சோடு கிளத்தல் போல் கூறப்பட்டுள்ளது சிறப்பானதாகும்.*

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார் இருங்கூந்தல் வயங்கு இழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே" (பட்டின: 218 - 220)

*என்றும்,*

"அரிமா அன்ன அணங்குடைத்துப்பின்
திருமாவளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்யகானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே" (பட்டின: 298 - 301)

8. *பழந்தமிழர்கள் வானநூல் புலமையில் தலைசிறந்து விளங்கியதை,*

"வசையில் புகழ் வயங்கும் வெண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்"

*என்ற பாடல் வரிகள் உணர்த்துகிறது. வெள்ளி என்னும் கோள் வடக்குத் திசையில் நிற்காமல் தெற்குத் திசை பார்த்துச் சென்றால் நாட்டில் மழையின்றிப் பஞ்சம் உண்டாகும் என்பதை உணர்ந்திருந் தனர்.*

9. சோழன் கரிகாலனுடைய வீரம், வெற்றி, கொடை, புகழ் போன்றவையும் விளக்கிக் கூறப்படுகிறது.

## 4. நெடுநல்வாடை

| | | |
|---|---|---|
| திணை | : | அகமும் புறமும் கலந்தது |
| திணைப்பிரிவு | : | முல்லைத்திணையும், வஞ்சித்திணையும் |
| பாவகை | : | ஆசிரியப்பா |
| அடியெல்லை | : | 188 அடிகள் |
| பாடிய புலவர் | : | மதுரைக்கணக்காயர் மகனார் நக்கீரர் |
| பாட்டுடைத் தலைவன் | : | தலையாலங்காலத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் |

### நெடுநல்வாடை - விளக்கம்

நெடு + நல் + வாடை = நெடுநல்வாடை நெடிய நல்வாடைக் காற்று எனப்பொருள் படும்.

தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவிக்கு வாடைக் காற்றானது கொடிய துன்பத்தைத் தரும் நெடுவாடையாக வீசுகிறது. வினைமேற் சென்ற தலைவனுக்கு நன்மை தரும் நல்வாடையாகவும் தோன்று வதால் இது நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது.

### அகம் புறம் விளக்கம்

அகத்திணைக்குரிய செய்திகளே அதிகம் இடம் பெற்றாலும் ஒரே ஒரு வரியில் மட்டும் **‘வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்’** என்று பாண்டிய மன்னனுடைய அடையாள மாலையாகிய வேம்பு மலையைக் குறிப்பிடும் தொடர் வருவதால் இஃது அகமும் புறமும் கலந்த நூல் என்றழைக்கப்படுகிறது.

### நெடுநல்வாடையின் சிறப்புக்கள்

1. மேகம் வானத்திலிருந்து உலகம் முழுவதும் குளிரும்படி மழை பொழிந்தது. மிகுதியான மழையால் குளிர்காற்று வீசுகிறது. கடுங்குளிரால் விலங்குகள் மேய்த்தல் தொழிலை மறந்தன. குளிர்க் காற்றின் கொடுமையால்

“மாமேயல் மறப்ப மந்தி கூர
பறவை படிவன வீழக்கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப் பன்ன கூதிர்ப்பானாள்” (நெடு. 9 - 12 அடிகள்

*விலங்குகள் மேய்த்தல் தொழிலை மறந்தன. பறவைகள் மரத்தில் இருந்து தரையில் வீழ்ந்தன. பசுக்கள் தன் கன்றுகளுக்குப் பாலினைக் கொடுக்காமல் உரைத்தன என வாடைக் காற்றின் குளுமையை நயம்பட உரைக்கிறார்.*

2. *பெரும் மழையின் காரணமாக எல்லா இடங்களிலும் இருள் சூழ்ந்திருந்ததால் பூக்கள் மலர்வதைக் கண்டுதான் அந்திப் பொழுதை மக்கள் தெரிந்து கொண்டனர்.*
3. *தலைவனைப் பிரிந்த காரணத்தால் பாண்டிமாதேவி காது களில் குழைகளை அணியாலும், அழுக்குப்படிந்த உடையினையும் அணிந்து கொண்டு, கழுத்தில் ஒரே ஒரு மங்கல அணிகலன்களை மட்டும் அணிந்து 'புனையா ஓவியம் போல காட்சியளித்தாள்'*
4. *அந்தப்புரத்தில் உள்ள அரசித் துயிலும் கட்டில்களின் கால்கள் யானைத் தந்தங்களால் செய்யப்பட்டிருந்ததையும் எடுத்துக் கூறுகிறது.*

## புறம் சார்ந்தவை

## 1. மதுரைக்காஞ்சி

| | | |
|---|---|---|
| *திணை* | : | *புறத்திணை* |
| *திணை உட்பிரிவு* | : | *மருதத்திணை* |
| *பாவகை* | : | *வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பா* |
| *அடியெல்லை* | : | *782 அடிகள்* |
| *பாடிய புலவர் நூலாசிரியர்* | : | *மாங்குடி மருதனார்* |
| *சிறப்புப்பெயர்* | : | *காஞ்சிப்புலவர்* |
| *பாட்டுடைத் தலைவன்* | : | *தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்* |

## சிறப்புப்பெயர்கள்

*கூடற்தமிழ், பெருகுவள மதுரைக்காஞ்சி, ஒரு நாள் நிகழ்வுமைய இலக்கியம், மதுரையின் புவியியல் கையேடு காஞ்சிப்பாட்டு, காஞ்சித்திணை மாநகர்பாட்டு.*

## மதுரைக்காஞ்சி பொருள் விளக்கம்

*மதுரையை ஆண்ட மன்னனுக்கு உலக இன்பம், பொருட் செல்வம், இளமை, யாக்கை இவையனைத்தும் நிலையில்லாதவைகள் என்று காஞ்சித்திணையை விரித்துக்கூறுவது மதுரைக்காஞ்சியாகும்.*

*காஞ்சி என்றால் நிலையாமை என்று பொருள். மதுரையின் சிறப்புகளையும், நிலையாமைத் தத்துவத்தையும் இரண்டறக் கலந்து பாடுவதால் மதுரைக்காஞ்சி என்றழைக்கப்பட்டது.*

## மதுரைக்காஞ்சியின் சிறப்புக்கள்

1. *பத்துப்பாட்டு நூல்களுள் மிகப்பெரிய நூல்.*

2. *மதுரையின் சிறப்புக்கள் 354 வரிகளிலும், 428 வரிகளில் நிலையாமைத் தன்மையையும் வலியுறுத்திப் பாடுகிறது.*

3. *முடி சார்ந்த மன்னரும் முடிவில் ஒருபிடி சாம்பல் ஆவர் என்ற பழமொழிக்கு ஏற்ப நிலையாமையை உணர்த்தப் பாடப்பட்ட நூல்.*

4. *ஒரு நாள் காலையில் தொடங்கி மறுநாள் விடியல் வரையில் மதுரை நகரத்தைச் சுற்றி வந்து கண்டவற்றை முறைப்படக் கூறுவது போல் மதுரை நகரம் 354 வரிகளில் சுற்றிக்காட்டப்படுகிறது.*

5. *போர் செய்வதையே தொழிலாகக் கொண்ட பாண்டிய நெடுஞ் செழியனுக்கு அவனின் முன்னோர்கள் ஆன,*

“முந்நீர் வழும்பு அலம்ப நின்ற பாண்டியன்
பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி”

*நிலந்திரு திருவிற் பாண்டியனின் சிறப்புக்களை எடுத்துரைத்து பின்னர் மற்ற முடியுடை மன்னர்களைப் போல முடிவில் மாநிலத்தை விட்டு மறைய வேண்டியவன் என்பதை,*

“கொன்னொன்று கிளக்குவல் அருளோர் அண்ணல்
கேட்டிசின் வாழி கெடுக நின் அவலம்”

*என்று எடுத்துக்கூறிய பின்பு*

“அன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலக மாண்டு கழிந்தோரே”

*என்ற அடிகள் வாயிலாக நிலையாமைத் தத்துவத்தை வலியுறுத்திக் கூறுகின்றார்.*

6. *பாண்டிய நாட்டின் ஐவகை நிலவளத்தையும் நிரல்படவும், அழகுபடவும் பாடுகிறார் மாங்குடி மருதனார்.*

*குறிஞ்சிநிலம் - அகில், சந்தனம், ஐவனநெல், வெண்சிறுகடுகு தோரை என்னும் நெல் முதலியன*

*முல்லைநிலம் - எள்ளு, தினை, வரகு முதலியனவும்*

மருதநிலம் - நெல், கவலைக் கிழங்குகள், தாமரை, ஆம்பல்பூக்கள் முதலியனவும்

நெய்தல் நிலம் - முத்து, சங்கு, உப்பு, மீன் முதலியன

பாலை நிலம் - மூங்கில், ஊகம் புல் முதலியன

7. வையையாற்றை வருணிக்கும் போது, 'விரிநீர் நல்வரல் வையை' என்று வருணிக்கிறார்.

8. மதுரை நகரின் சிறப்புக்களையும், அழகினையும் நாள் அங்காடி, அல் அங்காடியில் உள்ள பொருட்களையும், மக்களின் வாணிக முறையை,

"அறநெறி பிழையாது ஆற்றின் ஒழுகி" என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறார்.

9. மதுரையின் அகன்ற தெருக்களை 'ஆறு கிடந்தன்ன அகந் நெடுந்தெரு' என்று வருணிக்கிறார்.

மாலை நேரத்தில் - கோவில்களில் கேட்கும் இசைகளும்

பௌத்தப்பள்ளியில் - வேதநூற்களைக் கற்கும் ஓசைகள்

மாலை நேரத்தில் - மக்கள் விளக்குயேற்றி வழிபடும் முறைகளும்

விலைமகளிர் - நெஞ்சு நடுக்குறும் கொண்டி மகளிர் என்றும்

கற்புடைய மகளிர் - இல்லறக் கடமையாற்றுவதும்

களவு நூலை ஐயமறக் கற்றவர்கள் தம்திறம் தெரியத் திருடச் செல்வர் என்று மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நிரல்பட வருணிக்கிறார்.

10. மதுரையில் புலர்காலைப் பொழுதில் கணவனின் பிடியில் இருந்து மகளிர் எழுகின்றதை அழகுற விளக்குகிறார்.

"புலர்ந்து விரி விடியல் எய்த விரும்பி"

11. பாண்டிய மன்னனின் அறங்கூறும் அவையம் நீதியின் நிலைக் களமாகக் காட்சியளிக்கிறது.

"அச்சமும் அவலமும் ஆவர்மும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
..........
சிறந்த கொள்கை அறங்கூறு அவையமும்" (ம.கா. 489-492)

12. மதுரையிலும், திருப்பரங்குன்றத்திலும் நடக்கும் அந்திவிழா, திருவோணவிழா, ஏழுநாள் நடைபெறும் விழா, நன்னன் பிறந்த நாள்விழா போன்ற விழாக்களையும் குறிப்பிடுகிறார்.